வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 06.05.2022 வெள்ளிக்கிழமை | இதழ் : 151 | பக்கங்கள் : 16




# நாடு முழுவதும் இன்று ஹர்த்தால்!

- 2000 தொழில்சங்கங்கள் ஆதரவு
- பாதுகாப்பு நடவடிக்கை உச்சம்!
- தொடர் ஹர்த்தாலுக்கும் ஏற்பாடு
- அத்தியாவசிய சேவைகள் இயங்கும்

கொழும்பு, மே 06

நாடு முழுவதும் இன்று வெள்ளிக்கிழமை பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட தொழில் சங்கங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளன.

15



## பல்கலை மாணவர்கள் பேரணி; கண்ணீர்ப் புகை பிரயோகம்!

*பாராளுமன்ற பகுதியில் பதற்றம்*

கொழும்பு, மே 06

அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் எதிர்ப்பு பேரணியை கலைக்க பொலிஸார் கண்ணீர்ப்புகை பிரயோகம் மேற்கொண்டனர். இதனால், நேற்று பாராளுமன்ற பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது.

“அரசாங்கத்தை விரட்டுவோம் -

15

## பாராளுமன்றை கலைத்து தேர்தலை நடத்துங்கள்!

*ஆளும் கட்சி எம். பி. வலியுறுத்து*

கொழும்பு, மே 06

புதிய பாராளுமன்ற உறுப்பினர்களை பாராளுமன்றுக்கு அறிமுகப்படுத்த தற்போதைய பாராளுமன்றம் கலைக்கப்பட்டு அரசமைப்பின்படி பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என்று பொதுஜன

15

## பிரதிச் சபாநாயகரானார் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய

*மொட்டு கட்சியும், சுயாதீன அணிகளும் சங்கமம்*

கொழும்பு, மே. 06

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பிரதிச் சபாநாயருக்கான தேர்வில், சுயாதீன அணிகளின் சார்பில் களமிறக்கப்பட்ட, பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய வெற்றி பெற்று, பிரதிச் சபாநாயகராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அவருக்கு ஆதரவாக 148 வாக்குகள்



அளிக்கப்பட்டன.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் களமிறங்கிய இம்தியாஸ் பாக்கீர் மாக்காருக்கு ஆதரவாக வாக்குகள் 65 வழங்கப்பட்டன. 3 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன.

பாராளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

சபாநாயகர் அறிவிப்பு, அமைச்சுகளின் அறிக்கைகள்

15

## நல்லூர் கந்தன் ஆலய நிர்வாகம்போல இந்தியாவிலும் கோயில்கள் வேண்டும்!

*தமிழ்நாட்டில் அண்ணாமலை புகழாரம்!*

சென்னை, மே 06

யாழ்ப்பாணம் - நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை போன்று தமிழகத்திலும் கோயில்களை நடத்த அனைவரும் முன்வரவேண்டும் என்று பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு தலைவர் கு. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்த அண்ணாமலை நேற்று முன்தினம்



தமிழகம் திரும்பியிருந்தார். அங்கு செய்தியாளர்களிடம் கருத்துரைத்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது, அவர் மேலும் கூறியவை வருமாறு,

யாழ்ப்பாணத்தில் இருக்கும் எந்த கோவில்களிலும் அரசாங்கத்துக்கு வேலை கிடையாது. அதேபோல் நாம் தமிழகத்தில் செய்வோம். யாழ்ப்பாணத்தில் முருகன் கோவில் இருக்கிறது. நல்லூர் கந்தசுவாமி கோவில் எனும் 13 நூற்றாண்டுகள் பழமைவாய்ந்த

15

## ஆளுங்கட்சி ஆதரவு அளித்தாலும் சுயாதீனமாகவே செயற்படுவேன்

*சபையில் புதிய பிரதி சபாநாயகர் உறுதி*

கொழும்பு, மே. 06

”எனக்கு ஆதரவாக ஆளுங்கட்சி வாக்களித்துள்ளது. எனினும், சுயாதீனமாகச் செயற்படும் எமது கட்சியின் (ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி) முடிவு மாறாது. இதில் உறுதியாக இருக்கின்றோம்.”

- இவ்வாறு புதிய பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தனக்கு வாக்களித்த உறுப்பினர்களுக்கு நன்றி கூறிய அவர், மக்களின் பிரச்னைகள் விரைவில் தீர்க்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

எதிரணிகளின் பலத்தைக் காண்பிக்க இருந்த வாய்ப்பை, எதிரணிகள் தவறவிட்டுவிட்டன எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

*பிரதி சபாநாயகர் தெரிவு வாக்களிப்பில்*

## சம்பந்தன், விக்கி பங்கேற்கவில்லை!

கொழும்பு, மே 06

புதிய பிரதி சபாநாயகரை தெரிவு செய்வதற்காக நேற்று பாராளுமன்றம் கூடிய நிலையில் சம்பந்தன், விக்னேஸ்வரன், விமல் வீரவன்ஸ உள்ளிட்டவர்கள் பாராளுமன்ற அமர்வில் பங்கேற்கவில்லை.

புதிய பிரதி சபாநாயகரை வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்வதற்காக நேற்று பாராளுமன்றம் கூடியது. இதன்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்

15

## எரிபொருள் நிரப்ப மீண்டும் கட்டுப்பாடு!

கொழும்பு, மே 06

வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்புவதற்கான கட்டுப்பாடு நேற்று முதல் மீண்டும் நடைமுறைக்கு வந்துள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

புதிய கட்டுப்பாட்டின்படி, அதிகபட்சமாக, மோட்டார் சைக்கிள்களுக்கு 2 ஆயிரம் ரூபாய்க்கும், முச்சக்கரவண்டிகளுக்கு 3 ஆயிரம் ரூபாய்க்கும், கார் மற்றும் வான்களுக்கு 8 ஆயிரம் ரூபாய்க்கும் மட்டுமே எரிபொருள் நிரப்ப முடியும்.

இதேவேளை, பேருந்துகள், பாரவூர்திகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு இந்தக் கட்

15

## இப்படியும் நடக்கிறது...!

'மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகுகிறார். இடைக்கால அரசு அமைகின்றது' என்று பரவலாக நம்பப்பட்ட போதிலும், கடைசி நேரங்களில் நடந்த பேரம்பேசல்கள் மஹிந்த ராஜபக்ஷ பதவியில் இன்னும் சில நாட்களுக்காவது தொடர்வதற்கு உதவியிருக்கின்றது.

இடைக்கால அரசு சாதாரண பெரும்பான்மை இல்லாததாக இருந்தாலும் அப்படியோர் ஆட்சி அமைவதை ஜனாதிபதி அனுமதிப்பார் என்றும், சஜித் அணியிலிருந்தும் சிலர் அதில் இணைந்துகொள்வார்கள் என்பதும் கடந்த செவ்வாயிரவு உறுதியாகியிருந்த நிலையில், இடைக்கால நிர்வாகத்திற்கு சஜித் ஆதரவு வழங்க முன்வராதபோது அவரது நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கும் ஆதரவு வழங்குவதில்லை என்று சுயாதீனமாக இயங்கும் குழுவினர் முடிவெடுத்ததைத் தொடந்தே நிலைமை தலைகீழாகிவிட்டதாம்.

தான் கொண்டுவரும் அரசு மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வி அடையும் என்பதைத் தெரிந்துகொண்டதையடுத்தே, சஜித், அந்தப் பிரேரணையைக் கொண்டுவருவது, அதற்கு ஆதரவு வழங்காதவர்களை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்துவதற்காகவே என்று அறிவித்திருந்தார் என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டு பதவியிலிருந்து செல்வதை விட, இடைக்கால அரசுக்கு வழிவிட்டு, தானாகவே பதவி விலகுவது கௌரவமானது என்று நினைத்த மஹிந்தவுக்கு, நம்பிக்கையில்லா பிரேரணை தோல்வியடையும் என்பது உறுதியாகியதும், அப்படியெனில் இன்னமும் பாராளுமன்றின் நம்பிக்கைக்குரிய தலைவராக தான் இருக்கும்போது எதற்காக பதவி விலகவேண்டும் என்ற எண்ணம் கடைசி நேரத்தில் ஏற்பட்டதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது, ரணிலுக்கு எதிராக அவரது கட்சிக்குள்ளேயே பலதடவைகள் உட்கட்சிப் போராட்டங்கள் நடந்தன. அப்போதெல்லாம் ஐக்கிய தேசிக் கட்சிக்குள் ரணிலின் தலைமையைப் பாதுகாக்க ஜனாதிபதியாக இருந்த மஹிந்தர் உதவியதாகவும் கூறப்படுவதுண்டு.

அதேபோல, ரணில் பிரதமராக ஆட்சியிலிருந்தபோது, மஹிந்தரைப் பாதுகாக்க உதவுகிறார் என்ற குற்றச்சாட்டுக்களும் அவ்வப்போது முன்வைக்கப்பட்டன.

இதுபோலவே, மஹிந்தரைப் பாதுகாக்க சஜித் உதவுகிறார் என்ற குற்றச்சாட்டுக்களும் வெளிவரத் தொடங்கியிருக்கின்றன. ஆனால் அவ்வாறு இல்லை என்றும், அவர் (சஜித்) உடனடித் தேர்தல் ஒன்று வருவதையே விரும்புகின்றார் என்றும் அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. இவர் உடனடி தேர்தல் ஒன்றுக்கு செல்ல விரும்புவதற்கும் காரணங்களும் கூறப்படுகின்றன.

தனது கட்சியான ஜாதிக ஹெல உறுமயை கட்சியைக் கலைத்துவிட்டு, ஐக்கிய மக்கள் சக்தியிலும் சேராமல், *43* படையணி என்ற பெயரில் இயங்கிவரும் சம்பிக்க ரணவக்க, ஐக்கிய மக்கள் சக்தியிலிருக்கும் ஓர் அணியுடன் வெளியேறி, தனித்து ஓர் அணியாக இயங்க ஆயத்தமாகி வருகிறார்.

இன்றைய போராட்டங்கள் தீவிர இடதுசாரிகளை அரசியல் அரங்கில் வளர்த்து விட்டிருக்கின்றது. மக்கள் விடுதலை முன்னணி (ஜேவிபி) மாத்திரமன்றி, முன்னிலை சோசலிச கட்சியும் மக்கள் மத்தியில் கணிசமான ஆதரவுடன் வளரத் தொடங்கியிருக்கின்றது.

வலதுசாரி கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகிவிட்டது.

சஜித் அணியோ, எந்த அணியில் இருக்கின்றது என்பது அவருக்கே தெரியுமோ தெரியவில்லை. இந்நிலையில் பலம் பொருந்திய வலதுசாரி அணி ஒன்றின் தேவை இலங்கை அரசியலில் ஏற்பட்டிருக்கின்றது. இந்த இடத்தை தனதாக்க சம்பிக்க ரணவக்க தீவிரமாக முயன்றுகொண்டிருக்கிறார். கொழும்பு புத்திஜீவிகள் குழு ஒன்றும் அவர் பின்னால் அணிதிரண்டு வருகின்றது.

இதனால், அவர்களுக்கு வழியேற்படுத்திக் கொடுக்காமல் உடனடியாகவே தேர்தல் ஒன்றுக்கு சென்று விடவேண்டும் என்று கணக்குப் போடும் சஜித், அதனாலேயே வேறு எந்த மாற்று ஒழுங்குகளையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

போராட்டங்கள் இப்படியே பல மாதங்களுக்கு நீடித்தாலும், அதனால் இன்றைய போராட்டங்களை மறைமுகமாக இருந்து வழிநடாத்தும் ஜேவிபியும் முன்னிலை சோசலிசக் கட்சியுமே அதிக லாபம் பெறும் என்பதும் சஜித்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றதாம்.

அதனால், சஜித்தின் விருப்பம் உடனடித் தேர்தல் மட்டுமே என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள். ஆனால், உடனடித் தேர்தல் ஒன்றை பாராளுமன்றில் இன்றிருக்கும் எம்.பி.க்களில் பலரும் விரும்பவில்லையாம். அதிகம் ஏன், நமது கூட்டமைப்பு எம்.பி.க்களே விரும்பமாட்டார்கள் தானே!

**- ஊர்க்குருவி**

# எதிர்கால சந்ததியினரின் கல்வி அழியும் அபாயம்!

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், மே *06*

அனைவரும் தீர்க்க தரிசனமாகச் சிந்தித்து எதிர்கால சந்ததியின் வாழ்க்கை அழிந்துவிடாமல் பாதுகாப்பது மட்டுமன்றி அவர்களை உருவாக்கும் பொறுப்பை ஏற்றுள்ள ஆசிரியர்களுக்கு பழி வந்துவிடாமல் முடிவுகளை உடனடியாக எடுத்தே வேண்டும் - என்று இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த சங்கம் நேற்று விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அபாயகரமான நிலை மற்றும் பொருளாதார நெருக்கடி அனைத்தும் ஒருமித்து இந்த நாட்டின் எதிர்கால சிற்பிகளான பாடசாலை குழந்தைகளின் வாழ்க்கையை சீரழித்து வருகின்றது.

நாளுக்கு நாள் பசி பட்டனி மற்றும் போக்குவரத்து இடர்ப்பாடு காரணமாக மாணவர்களின் வரவில் வீழ்ச்சி ஏற்பட்டு வருகின்றது. பாடசாலை நேரங்களில் மாணவர்கள் அத்தியாவசிய பொருட்களுக்காக வரிசையில் நிற்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இதற்காக அந்த மாணவர்களிடம் கேள்வி கேட்க எவராலும் முடியாது.

இப்போது அரசாங்கத்திற்கு எதிராக தொடங்கப்பட்டுள்ள போராட்டமானது அனைத்துத் துறைகளையும் முடக்கி வருகிறது. இது எமது எதிர்கால சந்ததியாகிய குழந்தைகளையே பெரிதும் பாதிக்கின்றது. இவர்களின் கல்வி நடவடிக்கைகள் தடையின்றி நடைபெற சாதகமான மார்க்கங்கள் எதனையும் எவரும் கண்டறிவதாக இல்லை. சரி பாடசாலைகளை இயக்கி குழந்தைகளின் கல்வி வளம்பெற அனைவரும் ஒத்துழைப்போமென்றால் அதற்கான தடைகளே ஏராளமாக வருகின்றன.

மாணவர்களின் ஆசிரியர்களின் அதிபர்களின் கல்விசார் உத்தியோகத்தர்களின் போக்குவரத்து மார்க்கங்கள் படுமோசமாக உள்ளன. உண்மையில் இந்நாட்டின் எதிர்கால சந்ததியின் வாழ்க்கையில் இப்போதைய அரசாங்கத்திற்கு அக்கறை இருக்குமாக இருந்தால் பாடசாலைக்கான போக்குவரத்து மார்க்கங்கள் அனைத்தையும் இலவசமாக்க வேண்டும். அவற்றை விடுத்து மாற்று வழிகளைத் தேடக்கூடாது.

இந்நாட்டில் போராட்டம் நீண்டு செல்லுமாக இருந்தால் மாணவரின் கல்வி மட்டுமல்ல அவர்களின் வாழ்க்கையும் கேள்விக்குறியாகும். பசியும், பட்டினியும், விரக்தியும் அவர்களை மாற்று வழிகளுக்குக் கொண்டு விடும். அதற்கு உதாரணமாக குழந்தை மாணவர்கள் பாடசாலைக்கே தீ வைத்த சம்பவம் சாதாரணமான ஒன்றல்ல.

இதே மாணவப் பராயத்தைத் தாண்டி உழைத்து வாழ ஆசைப்படும் இளையோரே இன்று ஜனநாயக வழியில் போராடிவருகின்றனர். ஆகையால் இந்நாட்டில் உள்ள அனைவரும் தீர்க்க தரிசனமாகச் சிந்தித்து எதிர்காலச் சந்ததியின் வாழ்க்கை அழிந்துவிடாமல் பாதுகாப்பது மட்டுமன்றி அவர்களை உருவாக்கும் பொறுப்பை ஏற்றுள்ள ஆசிரியர்களுக்கு பழி வந்துவிடாமல் முடிவுகளை உடனடியாக எடுத்தே வேண்டும் - என்றார். (ஐ)

## ஏ-9 வீதியில் விபத்து; மருத்துவர் காயம்!

முல்லைத்தீவு, மே *06*

ஏ- 9 வீதியில் நேற்று ஏற்பட்ட விபத்தில் மருத்துவர் ஒருவர் சிறு காயங்களுடன் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். முல்லைத்தீவு - முறிகண்டி - செல்வபுரம் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

முறிகண்டியிலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த ஜீப் ரக வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளானது. வேகமாக பயணித்த வாகனம் கட்டுப்பாட்டை இழந்து வீதி அருகில் உள்ள மரங்களுடன் பலமாக மோதியது.

மரங்களுடன் மோதியமையால் அவற்றின் கீழிருந்த சிறு கடைகள் பாதிக்கப்பட்டன. எனினும், கடைகளில் நின்றவர்களுக்கு எந்தப் பாதிப்பு ஏற்படவில்லை.

வாகனத்தில் இருவர் பயணித்த நிலையில் அதனை செலுத்திய மருத்துவர் மட்டும் சிறு காயங்களுக்கு இலக்காகி கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அந்த மருத்துவர் அக்கராயன் பிரதேச மருத்துவமனையில் கடமையாற்றுபவர் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே *06*

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் வகையில் வீட்டுத்தோட்டம் அமைப்பது தொடர்பிலான செயன்முறை கலந்துரையாடல், இயற்கைவழி இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை மாலை **3.30 - 5.30** மணிவரை **209**, பலாலி வீதி, கோண்டாவிலில் அமைந்துள்ள எழுதிரள் பணிமனையில் இடம்பெறும்.

மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர் லக்சன் - நிகழ்வு இணைப்பாளர் **077 262 7553** அவர்களைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

## கல்வியங்காட்டில் திருட்டு: சந்தேகநபர் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், மே *06*

கல்வியங்காடு சந்திரசேகரப் பிள்ளையார் கோயில் பகுதியில் தொடர்ச்சியாக திருட்டு சம்பவங்களில் ஈடுபட்டு வந்த ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தக் கைது சம்பவம் பற்றி மேலும் அறியவருவதாவது,

சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் பகுதியில் வீடு ஒன்றில் கடந்த வெள்ளிக்கிழமை கைக்கணனி (ரப்) ஒன்றும் இரு கைபேசிகளும் களவாடப்பட்டன. இந்தச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு முறைப்பாடு அளிக்கப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் நேற்று முன்தினம் சந்தேக நபரை கைது செய்தனர்.

இவரை நேற்று யாழ்ப்பாணம் நீதிமன்றில் முற்படுத்தினர். அவர் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததைத் தொடர்ந்து, எதிர்வரும் 10ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

## வழிப்பறியில் ஈடுபட்டுவந்த இருவர் இளவாலையில் கைது!

யாழ்ப்பாணம், மே *06*

இளவாலை பொலிஸ் பிரிவில் வீதியில் செல்வோரிடம் தங்க நகைகளை அபகரித்து வந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அச்சுவேலி பகுதியில் வீடொன்றில் ஒளித்திருந்த போதே இவர்கள் இருவரும் நேற்று கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சண்டிலிப்பாய் - மாகியப்பிட்டி மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த 22 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

பெரிய விளான், வடலியடைப்பு பகுதிகளில் அண்மையில் இடம்பெற்ற வழிப்பறிக் கொள்ளைகளுடன் சந்தேக நபர்களுக்கு தொடர்பு உள்ளது என்றும், அவர்களால் கொள்ளையிட்ட நகைகள் அடகு வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இளவாலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் தம்மிக்க பத்மராஜ் தலைமையிலான குழுவினரே இந்த கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர். (ஐ-3)

ஈழநாடு
Eelanadu
06.05.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், சித்திரை 23

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ராஜபக்ஷக்களின் அமைதி?

ராஜபக்ஷ குடும்பத்தில் சிலர் பதவி விலகினாலும்கூட, இப்போதும் அரசாங்கத்தின் பிடி, அவர்களின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றது. எதிர்ப்புக்களை கையாளும் ஓர் உத்தியாக, சிலர் பதவி விலகிய போதிலும்கூட, ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், கதிரையில் இருக்கும் வரையில், ராஜபக்ஷக்கள் முற்றிலுமாக வீழ்ந்துவிட்டனர் என்று கருத முடியாது. அவர்கள் எழுவதற்கான தருணத்தைத் தேடிக் கொண்டிருக்கின்றனர் என்றே நோக்க முடியும். பஸிலின் அமைதியின் பின்னாலும் சில அரசியல் கணக்குகள் இருக்கலாம்.

இந்தளவுக்கு எதிர்ப்புகள் கிளம்பிய பின்னரும்கூட, அவர்கள் அமைதியாக இருப்பதற்குப் பின்னால் இரண்டு காரணங்கள்தான் இருக்க முடியும். ஒன்று, சிங்கள இளைஞர்களின் எதிர்ப்புக்களை அவர்கள் கனதியான ஒன்றாக நோக்கவில்லை. அடுத்தது, எதிரணி பலமாக இல்லை. இந்த இரண்டில் ஒன்று அவர்களுக்குப் பாதகமாக மாறாதவரையில், அவர்களின் வீழ்ச்சி, தாமதப்பட்டுக் கொண்டே செல்லும். இந்த தாமாதத்துக்கு மத்தியில், தாங்கள் எழுந்துவிடலாம் என்றும் அவர்கள் அரசியல் வியூகமொன்றை வகுக்கக்கூடும். ஆனால், பிரச்னையோ வேறு பக்கத்தில் இருக்கின்றது. அதாவது, அவர்கள் என்னதான் வியூகங்களை வகுத்தாலும்கூட – பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணாத வரையில், நிலைமைகளை சரி செய்ய முடியாது.

இந்தப் பின்னணியில் நோக்கினால், பொருளாதார நெருக்கடிதான் மறுபுறமாக, போராட்டக்காரர்களுக்கு புத்துணர்ச்சியும், உற்சாகமும் அளிக்கின்றது. நாடுதழுவி கடையடைப்பு, பணிப்புறக்கணிப்பு போன்ற மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளால், ராஜபக்ஷக்களை அகற்றமுடியுமா என்னும் கேள்வியே மீண்டும், மீண்டும் எழுகின்றது. ஏனெனில், இவ்வாறான எதிர்ப்புகளுக்கு அரசாங்கம் தலைசாய்த்திருந்தால், இடைக்கால அரசாங்கம் இதுவரையில் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். 21ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டு, நாட்டில், அடிப்படையான கட்டமைப்பு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் முன்னால், மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகியிருக்க வேண்டும். ஆனால், எதுவும் நடைபெறவில்லை. இதன் பொருள் என்ன? சிங்கள இளைஞர்களின் எதிர்ப்புக்களால், ராஜபக்ஷக்கள் அச்சமடையவில்லை என்பதுதானே?

மெமுதல்லை ராஜபக்ஷக்கள் பலரும் எதிர்பார்ப்பது போன்று, சாதாரணமாகப் பதவி விலகிப் போகப் போவதில்லை. 2015இல், ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த மஹிந்த ராஜபக்ஷ, உடனடியாகவே, தன்னைச் சுற்றி அனுதாப அரசியல் அலையொன்றை, உருவாக்கிக் கொண்டார். அதன் மூலம் மீளவும் மெதமுல்லை எழுச்சிக்கான திட்டங்களை தீட்டினார். இலங்கையின் அரசியல் வரலாற்றில், தோல்வியுற்ற ஜனாதிபதி ஒருவர் மீளவும் பாராளுமன்ற உறுப்பினராக வரும், அரசியல் கலாசாரம் ஒன்றுக்கு வித்திட்டார். இதனைப் பின்பற்றித்தான், இப்போது, முன்னாள் ஜனாதிபதி, மைத்திரிபால சிறிசேனவும், பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்றார். அதிகாரத்தை இலக்கு வைத்து, எந்த எல்லைக்கும் செல்வதே மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் அணுகுமுறையாகும். இப்படியான ஒருவர், மிகவும் சாதாரணமாக தனது கதிரையை விட்டுக் கொடுத்துவிட்டு, அரசியலிலிருந்து ஒதுங்கிச் செல்லப் போவதில்லை.

ஒருவேளை மஹிந்த, பிரதமர் பதவியிலிருந்து விலகினாலும்கூட, தனது அரசியல் பிடியை தக்கவைத்துக் கொள்ளும் வகையில், புதிய முகமொன்றுடன் மீளவும் அரசியலில் பிரவேசிப்பார். எனவே ராஜபக்ஷக்களை தென்னிலங்கை அரசியல் அரங்கிலிருந்து அகற்றுவதென்பது, தென்னிலங்கையில் பாரிய அரசியல் மாற்றமொன்றுடன்தான் நிகழ முடியும். அவ்வாறானதொரு மாற்றம் ஏற்படுமா? – அதனை முன்னெடுக்கப் போகிறவர்கள் யார்? வெறும் பாரம்பரிய எதிர்கட்சி அரசியலால் அதனை செய்ய முடியுமா? இந்தக் கேள்விகள் எவற்றுக்கும் தெளிவான பதில்கள் இல்லை. இந்தத் தெளிவற்ற பதில்களுக்கு மத்தியில்தான் ராஜபக்ஷக்கள் அமைதியாக இருக்கின்றனர்



# வடக்கே அண்ணாமலை!

**அலசுவது இராஜதந்திரி**

*2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய பிரதமர் நரேந்திர மோடி யாழ்ப்பாணத்துக்கும் வந்திருந்தார். அங்கே இந்திய உதவியுடன் வடக்கே இடம் பெயர்ந்தோருக்கென கட்டப்பட்ட வீடுகளை கையளிக்கும் நிகழ்வொன்றிலும் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொண்டதோடு கீரிமலையில் அமைந்துள்ள நகுலேஸ்வரம் கோயிலுக்கும் அவர் சென்றிருந்தார்.*

*இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் யாழ்ப்பாண வருகை இடம்பெற்று ஆறு வருடங்களின் பின்னர் அவரின் கட்சியான பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநில தலைவரான கு. அண்ணாமலை கடந்த இரு தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள நிலவரங்களை பார்வையிட்டிருந்தார்.*

*பாரதிய ஜனதா கட்சியின் தமிழக மாநில தலைவரான கு. அண்ணாமலையின் யாழ்ப்பாண விஜயத்தை எடுத்து நோக்கும் போது இந்திய பிரதமரின் மோடியின் யாழ்ப்பாணத்துக்கான விஜயமே ஞாபகத்துக்கு வருகின்றது.*

*இந்தியா தெற்காசியாவில் ஒரு வல்லரசாக இருப்பதோடு இலங்கைக்கு பெரிதும் துணை நிற்கும் ஒரு நாடாகவும் விளங்குகின்றது. அத்துடன், மூன்று தசாப்தகால யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த முதலாவது இந்திய பிரதமராகவும் நரேந்திர மோடி விளங்கியிருந்தார்.*

*யாழ்ப்பாணத்தில் கீரிமலைப் பகுதியல் இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடொன்றை கீரிமலைப் பிரதேசத்தில் குடியிருப்பாளருக்கு வழங்கும் நிகழ்வொன்றில் மோடி பங்குபற்றியிருந்தார். இந்த நிகழ்வில் அன்று வட மாகாண முதலமைச்சராக இருந்த சி. வி. விக்னேஸ்வரனும் பங்குபற்றியிருந்தார்.*

*இருந்தபோதிலும் குறிப்பிட்ட நேரத்தில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி வீடு கையளிக்கும் நிகழ்வுக்காக கீரிமலைப் பிதேசத்துக்கு வந்திருந்தார். ஆனால், இந்திய பிரதமர் நரேந்திர மோடியை நெடுநேரம் காக்க வைத்த பின்னரே, வட மாகாண முதலமைச்சராக இருந்த சி.வி. விக்னேஸ்வரன் நிகழ்விடத்துக்கு வந்து தமது தாமதத்துக்கு பிரதமர் மோடியிடம் மன்னிப்பும் கேட்டிருந்தார்.*

*வழமையாக ஒரு பிரதமரை அதுவும் ஒரு வெளிநாட்டு பிரதமரை எதிர்கொண்டு அழைப்பதே அவர் விஜயம் செய்த இடத்தைச் சேர்ந்தோரின் வழக்கமாகும். ஆனால், இந்த வழக்கத்துக்கு மாறாக சி. வி. விக்னேஸ்வரன் இந்திய பிரதமரை காக்க வைத்தமை இந்திய இராஜதந்திர வட்டாரத்தை அன்று முகம் சுழிக்கவும் வைத்திருந்தது.*

*எனவே, பிரதமர் மோடியின் யாழ்ப்பாண விஜயம் இடம்பெற்று ஆறு ஆண்டுகளின் பின்னர் அவரின் கட்சியான ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் தமிழ் நாடு மாநில தலைவரான கு. அண்ணாமலை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தார்.*

*இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டமையை அடுத்து யாழ்ப்பாணத்தவர்கள்மீதான இந்திய ஆட்சியாளர்களின் பார்வை சற்று வித்தியாசமானதாகவே இருந்தது. ஆனால், இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் யாழ்ப்பாண விஜயம் யாழ்ப்பாணத்தவர்கள் மீதான இந்தியர்களின் வெறுப்பை ஓரளவுக்கு நீக்குவதாகவும் விளங்கியிருந்தது.*

*எனவே, தற்போது இந்திய ஆளும் கட்சியான பாரதிய ஜனதா கட்சியின் மற்றுமொரு முக்கியஸ்தரான கு. அண்ணாமலை வட பகுதிக்கு விஜயம் செய்திருந்தபோது அவரை பிரதமர் நரேந்திர மோடியை காக்க வைத்தது போலன்றி தமது அலுவலகத்தில் வரவேற்று கலந்துரையாடியிருந்தார் முன்னாள் வட மாகாண முதலமைச்சரான சி. வி. விக்னேஸ்வரன்.*


*வடக்கு - கிழக்கு மக்களைப் பொறுத்தவரை இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுலாக்கப்பட வேண்டுமென்பதே முக்கிய கோரிக்கையாக இருக்கின்றது. இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கை வந்திருந்த சமயத்திலும் 13ஆவது திருத்தச்சட்டத்தின் அவசியம் வடக்கு-கிழக்கின் தமிழ் அரசியல் தரப்பினரால் வலியுறுத்தப்பட்டிருந்தது.*

*இதுதவிர, அண்மையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் இலங்கை வந்திருந்தபோதுகூட 13ஆவது திருத்தச்சட்டத்தின் அமுலாக்கம் குறித்து வலியுறுத்தப்பட்டிருந்தது.*

*இத்தகைய பின்னணியில் தற்போது தமிழக பா. ஜ. க தலைவர் கு. அண்ணாமலை வடக்குக்கு விஜயம் செய்ததோடு வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு விரைந்து தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியிருந்தார்.*

*ஆனால், பேச்சளவில் மட்டும் வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தாது பிரதமர் நரேந்திர மோடியின் அனுசரணையை கு. அண்ணாமலை அழுத்தம் திருத்தமாக இந்தியா திரும்பியதும் வலியுறுத்த வேண்டியதே இன்றியமையாததாகின்றது.* •

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
நீங்கள் எதிர்பார்த்த லாபம் கிடைக்கப்பெற்று மகிழ்வீர்கள். தொழிலில் இருந்த தேக்கம் விலகும் தன லாபம் அடைவீர்கள். தன வரவு அதிகரிப்பதால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்**
வார்த்தைகளில் இருக்கும் தெளிவால் நன்மை களைக் காண்பீர்கள். எதிர்பார்த்த செயலில் தடை உண்டாகி பின்னர் நிவர்த்தியாகும். முயற்சி யால் ஏற்பட்ட உழைப்பு அதிக லாபத்தை ஏற்படுத்தும்.

**மிதுனம்**
குடும்பத்தில் மகிழ்ச்சியான சம்பவங்கள் நடை பெறும் நாள். தொழிலை விரிவுபடுத்த புதிய வழி களைக் கண்டறிவீர்கள். உறவினர் ஒருவர் மூலம் எதிர்பாராத நன்மை உண்டாகும்.

**கடகம்**
குடும்பத்தில் சுபச்செலவு ஏற்படும். அதனால் மகிழ்ச்சி அதிகரிக்கும். திடீர் வரவு உண்டாகும், அதற்கேற்ப செலவும் ஏற்படும். முந்தைய கடின உழைப்பிற்கு ஏற்ற பலனை இன்று காண்பீர்கள்.

**சிம்மம்**
எதிர்பாராத வரவுகளால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். கேளிக்கை விஷயங்களில் கவனம் தேவை. நட்பு வட்டம் விரியும். நண்பர்களின் உத வியால் மகிழ்ச்சி காண்பீர்கள்.

**கன்னி**
புதிய பொறுப்புகளை ஏற்று செயல்படுவீர்கள். வார்த்தைகளின் வழியே சங்கடங்களை சந்திப் பீர்கள். குடும்பத்திற்குள் குழப்பம் உண்டாகும் என்ப தால் நிதானம் தேவை.

**துலாம்**
புதியவர்களிடம் விழிப்புணர்வுடன் தேவை, சிந்தனை மேலோங்கும். மனதில் இனம் புரியாத குழப்பம் உண்டாகும். அமைதி தேவை. பெரிய வர்களின் ஆலோசனைகள் உங்களுக்கு நன்மை தரும்.

**விருட்சிகம்**
நீங்கள் ஈடுபடும் செயல்களில் தடைகளை சந்திக்க வேண்டியதாக இருக்கும். அலைச்சல் அதிகரிக்கும். அதற்குரிய பலன் கிடைக்க சற்று தாமதம் ஏற்படும். தவறான நண்பர்களை அடையாளம் காண்பீர்கள்.

**தனுசு**
பணியிடத்தில் எடுத்த புதிய முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். எதிர்பார்த்தவற்றில் லாபம் உண்டா கும், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பொது வாழ்வில் எடுத்த காரியம் யாவும் வெற்றியாகும்.

**மகரம்**
உங்களுடைய முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். நேற்றுவரை நிறைவேறாமல் இருந்த செயல் இன்று நிறைவேறும். குடும்ப முன்னேற்றத்திற்காக இன்று நீங்கள் எடுத்த முயற்சி வெற்றியாகும்.

**கும்பம்**
முயற்சிக்கு ஏற்ற லாபம் கிடைப்பதில் தடை, தாமதம் உண்டாகும். நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளில் ஓரளவிற்கே நன்மை கிடைக்கும். கிடைப்பதுபோல் இருந்த தொகை தள்ளிப்போகும்.

**மீனம்**
உங்களை சங்கடப்படுத்திய பிரச்சனை இன்றோடு விலகும். மனதிற்கினிய சம்பவங்களால் மகிழ்ச்சி அடைவீர்கள். உங்கள் முயற்சிகளுக்குண்டான பலனைக் காண்பீர்கள்.

# 99 ஆண்டுகளுக்கு கச்சதீவை குத்தகையில் பெற இந்தியா திட்டம்?

சென்னை, மே 06

99 ஆண்டுகள் குத்தகை அடிப்படையில் கச்சதீவை மீளவும் பெறுவதற்கு இந்தியா திட்டமிட்டுள்ளதாக அறிய வருகிறது.

இலங்கை வந்த பாரதிய ஜனதாக கட்சியின் தமிழக தலைவர் கு. அண்ணாமலை அந்தக் கட்சியின் இந்திய தலைவர் ஜே. பி. நட்டாவிடம் இந்தத் திட்டத்தைக் கூறியுள்ளார் என்று தமிழக தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணம் வந்த அண்ணாமலை சிறையில் இருக்கும் இராமேஸ்வரம் மீனவர்களையும் சந்தித்தார். இதன் பின்னர், பா. ஜ. கவின் இந்திய தலைவர் நட்டாவிடம் தொலைபேசியில் பேசிய போதே இந்த விடயத்தை அவர் குறிப்பிட்டார் என்று அறிய வருகின்றது.

“இலங்கை, தமிழகத் தமிழர்கள் மட்டுமல் லாது, உலகம் முழுதும் உள்ள தமிழர்களிடம் பெரும் செல்வாக்கை பெறுவதற்கு கச்சத்தீவை 99 ஆண்டுகள் குத்தகைக்கு பெற வேண்டும். தமிழகம் - இலங்கை இடையே கடல் வழி போக்குவரத்தை தொடங்க வேண்டும்” என்றும் இதன்போது அண்ணாமலை குறிப்பிட்டுள்ளார் என்று தெரிகிறது.

மேலும், 1974ஆம் ஆண்டு இந்திரா காந்தி கச்சதீவை இலங்கையிடம் வழங்கினார். இதற்கு பாராளுமன்றில் வாஜ்பாய் கடும் எதிர்ப்பு



தெரிவித்தமையையும், பா.ஜ.கவின் முன்னாள் தேசிய தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி வழக்கு தொடர்ந்ததையும், நட்டாவிடம் அண்ணாமலை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதைத் தொடர்ந்து இந்திய வெளிவிவகார அமைச்சர் சு. ஜெய்சங்கர் கச்சதீவு பிரச்னை குறித்து இலங்கை அரசுடன் முக்கியமாக விவாதித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கச்சத்தீவை குத்தகைக்கு இந்தியா பெற்றால், அது பா.ஜ., அரசின் சாதனையாக மட்டுமல் லாது, அண்ணாமலையின் இலங்கை பயணத் திற்கு கிடைத்த வெற்றியாகவும் பார்க்கப்படும் என்றும் தமிழக தகவல்கள் தெரிவித்தன. (ஐ)

# இலங்கைக்கு நிவாரணமளிக்க ம. தி. மு.க. ரூ. 60 இலட்சம் உதவி!

சென்னை, மே 06

இலங்கை மக்களுக்கு நிவாரணமளிக்கும் தமிழக முதலமைச்சரின் திட்டத்துக்கு மறு மலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம் 13.15 இலட்சம் ரூபாயை - இலங்கை மதிப்பில் சுமார் 60.42 இலட்சம் ரூபாய் அளித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சி வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

“கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கி உணவு மட்டும் அடிப்படைத் தேவைப் பொருட்கள் கிடைக்காமல் பரிதவிக்கின்ற இலங்கை மக்களுக்கு, தமிழக அரசு சார்பில் மனிதாபிமான அடிப்படையில் நிதி மற்றும் பொருள் உதவி அளிப்பது என முதல்வர் அறிவித்து இருந்தார். தாராளமாக உதவும்படி பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்து இருக்கின்றார்.

அவரின் வேண்டுகோளை ஏற்று, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ரூபாய் 13 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் வழங் கப்பட்டது.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்



தின் சார்பில் ரூபாய் 5 இலட்சம் பாராளுமன்ற உறுப்பினரும், ம. தி. மு. க. பொதுச் செயலாள ருமான வைகோ,

பாராளுமன்ற உறுப்பினர் கணேசமூர்த்தி ஆகியோரின் ஒரு மாத ஊதியம் தலா 2 இலட்சம் 3 சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கிய ஒரு இலட் சத்து 5 ஆயிரம் ரூபாய் என்று மொத்த மாக 13 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை மற்றும் வரைவோலையாக முதல்வரிடம் வழங் கப்பட்டது.” என்று கூறப்பட்டுள்ளது. (ஐ)

## இலங்கைக்கு நிவாரணம்

# தே. மு. தி. க. 5 இலட்சம் உதவி!

சென்னை, மே 06

இலங்கை மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக தமிழக முதல்வர் அளித்துள்ள நிவாரண திட்டத் துக்கு தே. மு. தி. க. தலைவர் விஜயகாந்த் 5 இலட்சம் இந்திய ரூபாயை - நம் நாட்டு மதிப்பில் சுமார் 22 இலட்சத்து 97 ஆயி ரம் ரூபாயை வழங்கு வதாக அறிவித்துள் ளார்.




பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு உதவ தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் உதவி திட்டத்தை அண்மையில் அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து முதல்வர் நிவாரண நிதித் திட்டத்தையும் அவர் ஆரம்பித்து வைத்தார். இந் தத் திட்டத்துக்கே தே. மு. தி. க. 5 இலட்சம் ரூபாயை அன்பளிப்பாக வழங்க முன்வந்துள்ளது. (ஐ)

# உணவு தவிர்ப்பு: முருகன் மயக்கம்!

வேலூர், மே 06

பரோலில் செல்வதற்கு தன்னை அனுமதிக்க வேண்டும் என்று கோரி வேலூர் மத்திய சிறை யில் உணவு தவிர்ப்பு போராட்டம் நடத்தி வரும் முருகன் உடல் நிலை பாதிக்கப்பட்டுள் ளார்.



30 நாள்கள் பரோல் கேட்டு கடந்த ஐந்து நாட்களாக தண்ணீர் கூட அருந்தாமல் அவர் உண்ணாவிரதம் இருந்து வருகிறார். இந்நிலை யில், அவர் நேற்று மயக்கமடைந்தார் என் றும் அவருக்கு சிறை மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படுவதாகவும் அவரின் வழக் கறிஞர் தெரிவித்தார்.

முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற முருகன் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள் ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நம்பிக்கையில்லா பிரேரணையை எந்நேரமும் ஜனாதிபதிக்கு எதிராக கொண்டு வரமுடியாது!

## பிரதீபா மஹாநாமஹேவா கூறுகிறார்



கொழும்பு, மே 06

**அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு எதிராக எந்த நேரத்திலும் நம்பிக் கையில்லா பிரேரணையை கொண்டு வர முடியாது என சட்டத்தரணி கலாநிதி பிரதீபா மஹாநாமஹேவா தெரிவித்துள்ளார்.**

விசேட அறிக்கையொன்றை விடுத்துள்ள அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதிக்கு எதிராக பதவி நீக்க பிரேரணையை கொண்டு வரவேண்டும். பதவி நீக்க பிரேரணையை கொண்டு வருவதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் கையெ ழுத்திட வேண்டும். சபாநாயகரிடம் ஒப்படைக்க வேண்டும்.

சபாநாயகர் திருப்தி அடைய வேண்டும். அது பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும் பான்மையுடன் நிறைவேற்றப் படவேண்டும். இதைத் தவிர ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக் கையில்லா பிரேரணை கொண்டுவர முடியாது.

ஜனாதிபதிக்கு நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வரலாம் என நினைப்பது அரசியலமைப்புக்கு முற்றி லும் எதிரானது. சபாநாயகர் அதை ஏற்கவும் முடியாது-என்றார். (அ)

## ரயில்வே தொழிற்சங்கமும் ஹர்த்தாலுக்கு முழு ஆதரவு

கொழும்பு, மே. 06

ரயில்வே தொழிற்சங் கங்கள் நேற்று நள்ளிரவு 12 மணி முதல் ஒருநாள் வேலை நிறுத்தத்தை மேற் கொண்டுள்ளதாக அறிவித் துள்ளன.

நாடு முழுவதும் இன்று நடத்தப்படவுள்ள ஹர்த் தாலுக்கு ஆதரவு தெரிவிக் கும் வகையில் ரயில்வே ஊழியர்கள் வேலை நிறுத்தத்தை மேற்கொள் வதாக ரயில்வே தொழிற்சங் கங்களின் பேச்சாளர் தெரி வித்தார்.

இன்று நடைபெறும் ஹர்த்தாலுக்கு சமகி ஒன்றி ணைந்த தொழிற்சங்க சம் மேளனமும் ஆதரவு வழங்கியுள்ளதாக பாராளு மன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்தார். (அ)

## டீசல் விநியோகத்தில் சற்று தாமதம் வரலாம்

கொழும்பு, மே. 06

டீசல் விநியோகத்தில் சற்று தாமதம் ஏற்படலாம் என வலுசக்தி மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை உரை யாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அத்துடன், பெற்றோல் விநியோகம் மூன்று நாட்களுக் குள் சீராகும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இதேவேளை, எரிபொருளினை பெற்றுக்கொள் வதற்காக மக்கள் கடந்த இரு தினங்களாக நீண்ட வரிசை யில் காத்திருக்கின்றமையை அவதானிக்க முடிந்தது. (அ)

## இலங்கை அரசை கைவிட்டது சீனா!

கொழும்பு, மே. 06

இலங்கையினால் பெறப் பட்ட கடன்களை மறுசீர மைக்க சீனா மறுத்துள்ள தாக ஐக்கிய மக்கள் சக்தி யின் பாராளுமன்ற உறுப் பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா கூறியுள்ளார்.

பாராளுமன்றில் இத னைத் தெரிவித்த அவர், வெளிநாட்டுக் கையி ருப்பை அதிகரிப்பதற்கான வழிகளை கண்டுபிடிக்கத் தவறினால் நாடு மேலும் நெருக்கடியை எதிர் கொள்ள வேண்டியிருக்கும் எனக் கூறினார்.

மூன்று பில்லியன் அமெ ரிக்க டொலர் கடனைக் கோரி ஜப்பானிய பிரதமருக்கு ஜனாதிபதி கடிதம் எழுதி யுள்ளதாகவும், அவர் சாதக மான பதிலைக் காட்டி யுள்ளதாகவும் அறிந்தோம்.

அதுதான் தற்போது எமக்குள்ள ஒரே நம்பிக்கை. அந்தக் கடனைப் பெற்றுக் கொள்ளத் தவறினால், நாங் கள் கடுமையான சூழ் நிலையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்," என்று அவர்குறிப்பிட்டார்.(அ)

## மலையக தொழிற்சங்கமும் ஹர்த்தாலுக்கு முழு ஆதரவு!

கொழும்பு, மே. 06

தொழிற்சங்க வேலைநிறுத் தப் போராட்டத்துக்கு இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் முழு மையான ஆதரவு என்கிறார் சங்கத்தின் பொதுச் செயலா ளரும் பாராளுமன்ற உறுப்பின ருமான வடிவேல் சுரேஷ்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை காரியாலயத்தில் நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

ஜனாதிபதிக்கும், கொடுங் கோல் ஆட்சிக்கு எதிராகவும் நாடு பூராகவும் மக்கள் தங்க ளுடைய எதிர்ப்பை நாள் தோறும்தெரிவித்துக்கொண்டே இருக்கின்றார்கள். எனினும், ஆட்சியாளர்கள் அது குறித்து கவனம் செலுத்துவதாக இல்லை.

பொருளாதார நெருக்கடி யினால் நாடு பாரியதொரு பின்னடைவை கண்ணுற்று இருக்கின்றது என நிதியமைச் சர் பாராளுமன்றத்தில் முழு மையாக ஏற்றுக் கொண்டுள் ளார் .

வரிசைகள் ஓய்ந்தபாடில்லை, சுகாதாரம் கல்வி பெருந் தோட்ட மென அனைத்து துறைகளும் பாரியதொரு வீழ்ச்சியை கண் டுள்ளது. கட னால் ஒரு நாட்டை ஒரு போதும் கட்டியெழுப்ப முடியாது. தொலைநோக்குப் பார்வையும் திறன்பட செயற் பாடும் ஒரு ஆட்சிக்கு மிக முக் கியமானது . இவ் அரசாங்கத் துக்கு மீண்டும்ஒரு அழுத்தத்தை தெரிவிக்கும் நோக்குடன் இன்று நடைபெறும் வேலை நிறுத்த போராட்டத்துக்கு மலையக மக்களும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலா ளர் சங்கமும் தங்களுடைய முழுமையான ஆதரவை வழங் குகின்றது-என்றார். (அ)

## எரிபொருள் விலையேற்றத்தின் பின்னரும் தொடர்ந்தும் நட்டம்!



கொழும்பு, மே. 06

எரிபொருள் விற்பனையின் மூலம் தொடர்ந்தும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தா பனம் நட்டமடைந்து வருவதாக பாராளுமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் காஞ்சன விஜயசேகர இதனை தெரி வித்தார்.

அண்மையில் மேற்கொள் ளப்பட்ட எரிபொருள் விலையேற்றத்தின் பின்னரும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு 1613 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கொள்வனவு செய்யும் விலையைக் காட்டிலும் விற் பனை செய்யும் விலையில் நிவா ரணம் வழங்கப்படுகின்றமை கார ணமாகவே இந்த நட்டம் ஏற்படு வதாக அவர் தெரிவித்தார்.

விலை சீர்திருத்தத்தின் பின்னர் குறிப்பாக மண் ணெண்ணெய் லீற்றர் ஒன்று 313 ரூபாவுக்கு விற்பனை செய் யப்பட வேண்டியுள்ள போதும் 84 ரூபாவுக்கே பொதுமக்க ளுக்கு வழங்கப்படுவதாக அமைச்சர் கூறினார். (அ)

## ஜனாதிபதியை எதிர்க்க பின்னடிக்கும் வாசுதேவ



கொழும்பு, மே. 06

ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவுக்கு எதிராக முன்வைக்கப் பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரே ரணைக்கு ஆதரவளிக்காமல் இருப் பதற்கு பாராளுமன்றத்தில் சுயாதீன மாக செயற்படும் 11 கட்சிகளின் கூட்டணி தீர்மானித்துள்ளது.

இந்த தகவலை ஜனநாயக இடது சாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார உறுதிப்படுத்தினர்.

ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக் கையில்லாப் பிரேரணை முன்வைக்கப் பட்டிருந்தாலும், அதனை பாராளு மன்ற ஒழுங்கு புத்தகத்தில் உள்ளடக்கு வது குறித்து சட்டரீதியிலான சிக்கல் உள்ளமை உட்பட மேலும் சில கார ணங்களை அடிப்படையாகக் கொண்டே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ள தென தெரியவருகின்றது.

அடுத்த கட்ட அரசியல் நகர்வு தொடர்பில் ஆராய்வதற்காக 11 கட்சிகளின் கூட்டணியின் விசேட கூட்டமொன்று இடம்பெற்றது.

இதன்போது ஐக்கிய மக்கள் சக்தி யால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக் கையில்லாப் பிரேரணைகள் தொடர் பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

பிரதமர் பதவியை இராஜினாமா செய்வதற்கு மஹிந்த ராஜபக்ஷ தீர்மா னித்துள்ளாரென நம்பகரமான வட்டா ரங்கள் தகவல் வெளியிட்டுள்ளதால், அரசுக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணையும் ஏற்புடையதாக அமைந்துவிடும்.

சிலவேளை, பஸிலின் நிகழ்ச்சி நிரலை ஏற்று, பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷ பதவி விலக மறுத்தால், நம்பிக் கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு முடிவெடுக்கப்பட் டுள்ளது. தேசிய இணக்கப்பாட்டு அர சுக்கு சஜித் தரப்பு இணக்கம் தெரிவித் தால் மாத்திரமே இதற்கான ஆதரவை முழுமையாக வெளியிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## சிறைச்சாலைகள் விவகார இராஜாங்க அமைச்சராக சப்ரி

கொழும்பு, மே. 06

தற்போதைய நிதி மற்றும் நீதி அமைச் சர் அலி சப்ரிக்கு இராஜாங்க அமைச் சுப் பதவி ஒன்றும் கையளிக்கப்பட்டுள் ளது.

சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ் வளிப்பு இராஜாங்க அமைச்சராக, அமைச்சர் அலி சப்ரி இவ்வாறு நிய மிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஏப்ரல் 26 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில்,

அவர் குறித்த இராஜாங்க அமைச்சுப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளரினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நிதி மற்றும் நீதி அமைச்சு பதவிகளுக்கு மேலதிகமாக அவருக்கு, குறித்த இராஜாங்க அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

# நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை இழுத்தடிக்க அரச தரப்பினர் திட்டமா?

கொழும்பு, மே 06

**ஜனாதிபதி மற்றும் அரசுக்கு எதிராக பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை பாராளுமன்றில் எடுப்பது குறித்துத் தீர்மானிப்பதை சபாநாயகர் தள்ளிப் போட்டிருக்கிறார் எனத் தெரியவருகிறது.**

மேற்படி இரண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணைகளும் ஆங்கில மொழி மூல வாசகத்தில் அமைந்திருக்கின்றன எனக் கூறப்படுகிறது.

மூன்று மொழிகளிலும் அதன்மொழிபெயர்ப்புடன் அதன் வாசக வடிவங்களைப் பெற்ற பின்னரே அவற்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பது குறித்த தீர்மானத்தை சபாநாயகர் எடுப்பார் எனத் தெரிகின்றது.

நேற்று காலை பாராளுமன்றக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இதனை சபாநாயகர் கோடி காட்டினார் எனக் கூறப்பட்டது.

இந்தப் பிரேரணைகளை உடனடியாக பாராளுமன்றத்தில் எடுப்பதற்காக பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்தும் பிரேரணை ஒன்றை சமர்ப்பிப்பது குறித்து எதிர்க்கட்சிகள் நேற்றைய கூட்டத்தில் பிரஸ்தாபித்தன எனத் தெரியவருகிறது.

எது,எப்படி என்றாலும் இந்த பிரேரணைகளின் தமிழ், சிங்கள வடிவங்கள் மொழிபெயர்க்கப்பட்டு கிடைத்த பின்னர் அடுத்த கட்டம் குறித்து தீர்மானிக்கப்படும் என சபாநாயகர் கோடி காட்டினார் என்று அறியமுடிகின்றது. (அ)



## விடுவிக்கப்பட்ட 19 இந்திய மீனவர்கள் விமானம் மூலம் சென்னை சென்றனர்

யாழ்ப்பாணம், மே 06

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 19 இந்திய மீனவர்கள் நேற்றுக் காலை விமானம் மூலம் சென்னைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து நேற்று காலை அவர்கள் புறப்பட்டுச் சென்றனர்.

யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல மாவட்டங்களில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர்கள் விடுவிக்கப்பட்டு இந்தியத் தூதரகத்தின் உதவியுடன் விமானம் மூலம் அனுப்பிவைக்கப்பட்டனர். (அ)

## அலிசப்ரி ரஹீம் எம்.பி பயணித்த வாகனம் மோதி ஒருவர் மரணம்!

கொழும்பு, மே 06

புத்தளம் பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீமின் காரில் மோதுண்டு நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

பாலாவி - கற்பிட்டி பிரதான வீதியில் நேற்று முன் தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர் புத்தளம் பகுதியைச் சேர்ந்த 44 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டது.

விபத்து இடம்பெற்ற சந்தர்ப்பத்தில், பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமும் அந்த காரில் பயணித்துள்ளார் என பொலிஸாரின் முதல் கட்ட விசா ரணையில் தெரியவந் துள்ளது.

காரைச் செலுத்திய சாரதி கைது செய்யப்பட்டு நிலையில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸார் கூறினர்.(அ)

## கடவுச்சீட்டு விண்ணப்ப சேவைகள் இடைநிறுத்தம்

கொழும்பு, மே 06

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் தலைமை செயலகம் மற்றும் ஏனைய அனைத்து அலுவலகங்களிலும் ஒரு நாள் மற்றும் வழமையான கடவுச்சீட்டுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை நேற்று இடம்பெறவில்லை.

அவசர கணினி கட்டமைப்பின் பராமரிப்பு நடவடிக்கைகள் காரணமாக சேவைகள் இடைநிறுத்தப்பட்டன என தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், ஏனைய சேவைகளும் நேற்று நண்பகல் 12.30 மணி வரை மட்டுப்படுத்தப்பட்டதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்தது. (அ)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 06

நாவலர் பெருமானின் நூல் பணிகள் என்ற தலைப்பில் இன்று வெள்ளிக்கிழமை 3.30 மணிக்கு தொல்புரம் ஆதிமுத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் சிறப்பு சொற்பொழிவு நடைபெறவுள்ளது. சொற்பொழிவை சைவப்புலவர் கந்த. சத்தியதாசன் ஆற்றுவார்.

2022ஆம் ஆண்டு ஆறுமுக நாவலர் பெருமான் ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவர் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் "வாராந்த சொற்பொழிவும் - மாதந்தோறும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும்" இந்த சொற்பொழிவு நடைபெறுகின்றது.

இந்த நிகழ்வுக்கு கனடா ரொறன்ரோவில் வதியும் சிவஸ்ரீ பாலா. திருகுணானந்தக் குருக்கள் அனுசரணை வழங்கி வருகிறார். சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுகமைப்பில் இந்த சொற்பொழிவு நடைபெறும். சொற்பொழிவின் முடிவில், வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கான பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஐ)

## பப்ஜி விளையாடுவதில் மூழ்கியிருந்த குடும்பத்தலைவர் உயிரை மாய்த்தார்

கொழும்பு, மே. 06

அலைபேசியில் பப்ஜி விளையாட்டில் மூழ்கிப் போயிருந்த குடும்பத்தலைவர், தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாவடியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 28 வந்துடைய குடும்பத் தலைவரே இவ்வாறு உயிரை மாய்த்துள்ளார்.

"நேற்றிரவு படம் பார்த்து விட்டு தூக்கத்துக்குச் சென்றோம். காலையில் எழுந்து பார்த்த போது, கணவர் தூக்கிட்டு சடலமாக காணப்பட்டார்.

எப்போதும் பப்ஜி விளையாடுவதில் ஆர்வமாக இருப்பார். வேறு பிரச்னைகள் அவருக்கு இருக்கவில்லை" என்று மனைவி வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி இறப்பு விசாரணைகளை முன்னெடுத்தார். (அ-03)

## குருநகரில் இளைஞன் கொலை; 8 மாதங்களாக ஒளிந்திருந்த மூவர் நீதிமன்றத்தில் சரண்!

யாழ்ப்பாணம், மே. 06

குருநகரில் இளைஞன் கொலையுடன் முதன்மை சந்தேக நபரான ரெமி என அழைக்கப்படுபவர் உள்பட மூவர் சுமார் 8 மாதங்களின் பின்னர் நேற்று முன் தினம் தமது சட்டத்தரணி ஊடாக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் சரணடைந்தனர்.

மூவரையும் விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா உத்தரவிட்டார்.

2021ஆம் ஆண்டு ஒகஸ்ட் 22ஆம் திகதி பட்டப்பகலில் குருநகரில் வீதியில் வைத்து ஜெரன் (வயது-24) என்பவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.படுகாயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத் துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

சம்பவ தினத்தன்று நண்பர்களுடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது , மோட்டார் சைக்கிளில் வந்த மற்றோரு குழு அவர்கள் மீது சரமாரியாக வாள் வெட்டை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்று இருந்தனர். சம்பவத்தில் மேலும் இருவர் காயமடைந்தனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய முதன்மை சந்தேக நபர்களான ரெமி மற்றும் அவரது சகோதரர்களைத் தேடி தீவகம் உட்பட பல இடங்களில் தேடுதல் நடத்தினர். மேலும் பலர் கைது செய்யப்பட்டனர்.

9 நாள்களின் பின்னர் 6 பேர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர். அவர்கள் உள்பட 14 பேர் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

எனினும் முதன்மை சந்தேக நபர்களான சகோதரர்களில் ஒருவரான ரெமி தலைமறைவாகியிருந்தார்.

சுமார் 8 மாதங்களின் பின் ரெமி உள்ளிட்ட மூவர் தமது சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரன் ஊடாக நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் சரணடைந்தனர்.

சந்தேக நபர்கள் சார்பில் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது. அதனை நிராகரித்த நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா, சந்தேக நபர்களை மறு தவணை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இதேவேளை, கொல்லப்பட்டவருக்கும், தாக்குதல் நடத்தியவர்களுக்கும் இடையில் 2018ஆம் ஆண்டு மோதல் இடம்பெற்றதாகவும், அதன் தொடர்ச்சியாக இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன. (அ-03)

## வல்லை மதுபானச்சாலை கொலை; சந்தேகநபர்கள் இரண்டு பேர் கைது

### பிரதான சந்தேகநபர் உள்ளிட்ட இருவர் தலைமறைவு

யாழ்ப்பாணம், மே 06

வல்லைப் பகுதியில் அமைந்துள்ள மதுபானச்சாலையில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர்களில் ஒருவர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.மற்றொருவர் அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலையுடன் தொடர்புடைய முதன்மைச் சந்தேக நபர்கள் இருவரும் தலைமறைவாகியுள்ள நிலையில் கொலைக்கு உடந்தையாக உள்ள இருவரே பொலிஸ் காவலில் உள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு விடுதியில் மதுபானம் அருந்திய இரண்டு குழுவினருக்கு இடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் போத்தலினால் குத்தப்பட்டு உயிரிழந்தார்.

சம்பவத்தில் திக்கம் நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த ஞானசேகரம் குணசோதி (வயது- 25) என்பவரே கொலை செய்யப்பட்டார்.

சம்பவத்தையடுத்து போத்தலினால் குத்தியவர் உள்ளிட்ட நால்வர் தலைமறைவாகிய நிலையில் நெல்லியடிப் பொலிஸார் தேடி வந்தனர்.

அவர்களில் அல்வாய் கிழக்கைச் சேர்ந்த 25 வயதுடைய சந்தேக நபர் வீட்டில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டார்.

குடத்தனை மேற்கைச் சேர்ந்த 31 வயதுடைய சந்தேகநபர் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார்.கொலைக்கு உடந்தையாக இருந்தனர் என்ற அடிப்படை யில் சந்தேக நபர்கள் இருவரும் நெல்லியடி பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்கப்படுகின்றனர்.(அ-03)




# மன்னாரில் மலேரியா விழிப்புணர்வு ஊர்வலம்

மன்னார், மே 06

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் மன்னார் மலேரியா தடை இயக்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில்,மலேரியா விழிப்புணர்வு நடைபவனி நேற்று வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு முன் ஆரம்பமானது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தலைமையில் இந்த விழிப்புணர்வு ஊர்வலம் ஆரம்பமானது.

ஊர்வலத் தில்,வைத்தியர்கள்,சுகாதார வைத்திய அதிகாரிகள்,வைத்தியசாலைப் பணியாளர்கள்,பாடசாலை மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது மலேரியா தொற்று தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

இந்த ஊர்வலமானது மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் ஆரம்பமாகி,பிரதான வீதியூடாக மன்னார் பஜார் பகுதியை சென்றடைந்தது.

மீண்டும் அங்கிருந்து மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையை அடைந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உணவில்லாமல் மக்கள் இறக்கும் நிலை வரலாம்

## எச்சரிக்கிறார் மஹிந்த அமரவீர



**கொழும்பு, மே 06**

**இன்னும் மூன்று மாதங்கள் கடந்த பின்னர் நாட்டு மக்களின் பலர் இறந்து போவார்கள் என சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உப தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மஹிந்த அமரவீர தெரிவித்தார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது எதிர்நோக்கியுள்ள நிலைமை சம்பந்தமாக பல சந்தர்ப்பங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எச்சரிக்கை விடுத்திருந்தது. அந்த எச்சரிக்கையை எவரும் கவனத்தில் கொள்ளாது, எமது கட்சியை அவமதிக்கும் வகையில் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் சிலர் நடந்துகொண்டனர்.

எதிர்வரும் காலங்களில் எரிபொருள் கிடைக்காமல் போகலாம் சமையல் எரிவாயு கிடைக்காமல் போகலாம். மின் கட்டணத்தை பெருமளவில் அதிகரிக்கவேண்டும் என யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

மின் கட்டணம் அதிகரிக்கும்போது குடிதண்ணீர்க் கட்டணமும் அதிகரிக்கும். மீண்டும் எரிபொருள் விலை அதிகரிப்பை பற்றி பேசுகின்றனர். எரிவாயுவின் விலையை மீண்டும் அதிகரிப்பது பற்றியும் பேசுகின்றனர்.

இவ்வாறு அனைத்து பொருட்களின் விலைகளும் அதிகரித்து மக்கள் சாப்பிட உணவின்றி இறந்து போகலாம். உணவு மற்றும் அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு எதிர்காலத்தில் பலர் இறந்து போகக்கூடும்.

ராஜபக்ஷ அரசாங்கம் கொள்வனவு நடவடிக்கைகளுக்குப் புறம்பாக ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட பல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. அந்த சந்தர்ப்பத்தில் அவற்றுக்கு எதிராக குரல் கொடுத்து இருந்தால், ஒருவேளை நான் உயிருடன் இருந்து இருக்க வாய்ப்பிருக்காது.

அதேவேளை,சர்வகட்சி நிர்வாகம் ஒன்றை உருவாக்குவதே நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்னைக்கு ஒரே தீர்வு.

நாட்டின் உள்நாட்டு நெருக்கடிக்கு தீர்வு காண சர்வகட்சி இடைக்கால அரசாங்கத்தை அமைக்க மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் கைக்கோர்க்கவில்லை என்றால், எமது கட்சியும் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்துடன் எந்த இணக்கப்பாட்டுக்கும் வராது-என்றார். (அ)

# எரிபொருள் பிரச்னை மேலும் மோசமடையும்

கொழும்பு, மே. 06

எதிர்காலத்தில் இலங்கையின் கடன் கடிதங்கள் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால் ஒரு துளி எரிபொருளைக்கூட இலங்கைக்கு கொண்டு வரப்போவதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, தற்போது நாட்டில் எஞ்சியிருக்கும் டொலர்களை எரிபொருள் தாங்கி போன்று பதிவிறக்கம் செய்ய முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தனது எரிபொருள் பௌசர்களுக்கான எரிபொருளை வழங்குவதில் தாமதம் காட்டி வருவதாக எரிபொருள் விநியோகஸ் தர்கள் சங்கம் தெரிவித் துள்ளது. (அ)



# டயகமவிலிருந்து கொழும்புக்கு இளைஞர் ஒருவர் நடைபயணம்

கொழும்பு, மே. 06

அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு மற்றும் விலையேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நுவரெலியா-டயகம சந்திரிகாமம் தோட்டத்தில் இருந்து இளைஞர் ஒருவர் கொழும்புக்கான நடைபயணத்தை ஆரம்பித்துள்ளார்.

178 கிலோமீற்றர் தூரம் இந்த நடைபயணத்தை முன்னெடுத்து அவர் கொழும்பு காலி முகத்திடலை சென்றடைவார் என தெரிவிக்கப்பட்டது. 33 வயதுடைய புஷ்பநாதன் தியாகு என்பவரே இந்த நடைபயணத்தை முன்னெடுத்துள்ளார். (அ)

# எரிபொருள் விலை உயர்வின் பின்பும் அரசுக்கு தொடர்ந்தும் பெரும் நட்டம்!

## சபையில் கூறினார் அமைச்சர் காஞ்சன

கொழும்பு, மே. 06

எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரை தற்போதைய விலையில் எரிபொருளை வழங்கினால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மத்திய வங்கி மற்றும் நிதியமைச்சிடம் இருந்து 550 மில்லியன் அமெரிக்க டொலர்களை பெறவேண்டியிருக்கும் என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கடந்த ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் விலைத் திருத்தத்தின் பின்னரும் நட்டத்தைச் சந்தித்து வருவதாக அவர் கூறினார்.

கடந்த முறை எரிபொருள் விலை திருத்தம் செய்யப்பட்டபோது அமெரிக்க டொலர் 330 ரூபாயாக இருந்த நிலையில் தற்போது அது 360 ரூபாயாக உயர்ந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு கடந்த ஏப்ரல் 18ஆம் திகதி எரிபொருள் விலை திருத்தம் செய்யப்படுவதற்கு முன்னர் நாளாந்தம் ஆயிரத்து 613 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.



இரண்டு வருடங்களுக்கு முன்னர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு மாதாந்தம் 150 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிடவேண்டியிருந்தது. ஆனால் தற்போது உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை உயர்வினால் மே மாதத்துக்கான எரிபொருள் இறக்குமதி 550 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

இலங்கை மக்களுக்கு ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்யை 87 ரூபாவுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுத்தபோதிலும், அரசு மண்ணெண்ணெய் ஒரு லீற்றருக்கு 313 ரூபாயாக செலவழிப்பதாக தெரிவித்த அவர், அரசு இன்னும் டீசல் மற்றும் பெற்றோலுக்கு மானியம் வழங்கி வருவதாக குறிப்பிட்டார்.

இதனால் ஏற்படும் இழப்புகளை குறைப்பதற்கும் எதிர்கால எரிபொருள் கொள்வனவுகளுக்கு தேவையான ஏற்பாடுகளை செய்வதற்கும் இந்தியன் ஒயில் நிறுவனம் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியன அடுத்த வாரம் அமைச்சரவையில் வெளிப்படையான விலைச் சூத்திரத்தை அறிமுகப் படுத்தவுள்ளதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# இன்றைய கடையடைப்புக்கு 2,000 அமைப்புக்கள் ஆதரவு

கொழும்பு, மே. 06

இன்று நடைபெறும் 24 மணிநேர முழுக் கடையடைப்புக்கு 2000க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் ஆதரவளிப்பதாக தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையத்தின் இணை அழைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

அரச, அரை அரச நிறுவனங்கள், வங்கிகள், ஆடைத் துறையைச் சேர்ந்தவர்களும் இதில் ஈடுபடுவார்கள் என்று அவர் மேலும் கூறினார்.

மேலும், அரச வைத்தியசாலைகள் வழக்கம் போல் இயங்கி வருவதாகவும், அனைத்து அவசர சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று நள்ளிரவு 12 மணி முதல் 24 மணித்தியாலங்களுக்கு ரயில் சேவைகள் நிறுத்தப்படும் என ரயில்வே தொழிற் சங்கக் கூட்டணியின் அழைப்பாளர் எஸ்.பி.விதானகே தெரிவித்தார்.

அத்துடன், இன்று மேற்கொள்ளவுள்ள பணிப்புறக் கணிப்புப் போராட்டத்துக்கு தாம் ஆதரவளிக்கவுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். (அ)



# எலான் மஸ்க் கட்டுப்பாட்டில் ட்விட்டர்: ஜனநாயகத்துக்கு நன்மையா?

– ச.கோபாலகிருஷ்ணன்

பிற சமூக வலைதளங்களைவிடக் குறைவான பயனர்களைக் கொண்டிருந்தாலும் சமூகத்தில் அதிக செல்வாக்கு செலுத்தும் ட்விட்டர் தற்போது உலகின் மிகப் பெரிய பணக்காரரான எலான் மஸ்க் வசம் சென்றுவிட்டது. 44 பில்லியன் டாலர் தொகைக்கு ட்விட்டர் நிறுவனத்தின் அனைத்துப் பங்குகளையும் மஸ்க் வாங்கிக் கொள்ள ட்விட்டர் இயக்குநர்கள் குழு ஒப்புதல் அளித்துவிட்டது. இந்த ஆண்டு இறுதிக்குள் இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் என்று கூறப்படுகிறது. அதன் பிறகு, எலான் மஸ்க் ட்விட்டர் நிறுவனத்தின் உரிமையாளராகிவிடுவார்.

### செல்வாக்கு மிக்க சமூக ஊடகம்

அரசுகளின் தலைவர்கள், ஆட்சியாளர்கள், உலக அளவில் செல்வாக்கு மிக்க தலைவர்கள், அரசியலர்கள், சினிமா நட்சத்திரங்கள், எழுத்தாளர்கள், விளையாட்டு வீரர்கள் உள்ளிட்ட பிரபலங்கள் பலரும் ட்விட்டரையே அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். மிகக் குறைந்த எண்ணிக்கையிலான சொற்களைக் கொண்டு, செய்திகளைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளவும் ஹாஷ்டாக் (கு) மூலம் எந்த ஒரு செய்தியையும் அதிவிரைவாகப் பரப்பி, உலக அளவில் ட்ரெண்ட் செய்யவும் மிகவும் தோதான ஊடகமாக இருந்ததால் ட்விட்டர் மிக எளிதில் பிரபலமடைந்தது. 2006-ல் தொடங்கப்பட்ட ட்விட்டர் 2010-12-ல் லிபியா, எகிப்து, துனீசியா உள்ளிட்ட நாடுகளில் சர்வாதிகார ஆட்சிகள் அகற்றப்பட்டு, ஜனநாயகம் மலர்ந்த ‘அரபு வசந்த’த்துக்கு முக்கியப் பங்காற்றியது. உலகின் செய்தி ஊடகங்கள் அனைத்தும் உடனுக்குடன் செய்திகளைத் தமது ட்விட்டர் பக்கங்களில் வலையேற்றுவது அத்தியாவசியமானது.

### வியப்புக்குரிய ஆளுமை

விண்வெளி ஆராய்ச்சிக்கான மலிவு விலை ராக்கெட்களைத் தயாரிக்கும் ‘ஸ்பேஸ் எக்ஸ்’ நிறுவனத்தைத் தொடங்கியவர் எலான் மஸ்க். அதோடு, கனரக மின்வாகனங்களை உற்பத்தி செய்யும் டெஸ்லா நிறுவனத்தையும் அவர் விலைக்கு வாங்கினார். இவ்விரு நிறுவனங்களிலும் அவர் பணத்தை முதலீடு செய்து லாபம் ஈட்டுகிறவர் மட்டுமல்ல. ஸ்பேஸ் எக்ஸ் மூலமாக விண்வெளிக்கு அனுப்பப்பட்ட ராக்கெட்களின் தலைமை வடிவமைப்பாளரும் அவர்தான். டெஸ்லாவிலும் பல்வேறு மேம்பட்ட வசதிகளை உள்ளடக்கிய புதிய மாடல் கார்களின் வடிவமைப்பில் சி.இ.ஓ. மற்றும் தயாரிப்பு வடிவமைப்பாளரான அவருக்கு முக்கியப் பங்குள்ளது.

இப்படிப் பல நிறுவனங்களைத் தொடங்கியும் விலைக்கு வாங்கியும் விண்வெளி ஆராய்ச்சி, வாகன உற்பத்தி, சூரியசக்தி மின்கலன் தயாரிப்பு, செயற்கை நுண்ணறிவு, சுரங்க வடிவமைப்பு, உள்ளிட்ட பல்வேறு துறைகளில் கால்பதித்து, உலகின் மிகப் பெரிய பணக்காரராக உருவெடுத்திருக்கிறார் எலான் மஸ்க். மனித குலத்தை அனைத்துத் துறைகளிலும் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு நகர்த்திச் செல்லும் வேட்கை, தடாலடி முடிவுகளை எடுக்கும் துணிச்சல், பலரால் நினைத்துப் பார்க்கவே முடியாத விஷயங்களை முடித்துக் காட்டும் திறமை ஆகியவற்றால், உலகின் செல்வாக்கு மிக்க தொழிலதிபராகவும் மிகப் புகழ் பெற்ற ஆளுமையாகவும் உயர்ந்திருக்கிறார் எலான் மஸ்க்.

### மஸ்க் முன்வைக்கும் மாற்றங்கள்

ட்விட்டரைக் கைப்பற்றிய பிறகு, அதில் பிரதானமாக மூன்று மாற்றங்களைக் கொண்டுவரப் போவதாகச் சொல்லிவருகிறார் எலான் மஸ்க். ட்விட்டரில் கருத்துரிமை பேணப்படவில்லை என்பது மஸ்க்கின் முதன்மையான குற்றச்சாட்டு. உண்மைக்குப் புறம்பான தகவல்கள், ஆதாரமற்ற அவதூறுகள், வசைகளை உள்ளடக்கிய ட்வீட்களைப் போலியானவை என்று அம்பலப்படுத்துதல் மற்றும் அவற்றைத் தொடர்ந்து வெளியிடும் ட்விட்டர் கணக்குகளை முடக்குதல் உள்ளிட்ட தணிக்கை நடவடிக்கைகளை ட்விட்டர் நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. இந்த வகையில், அமெரிக்காவின் முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் ட்விட்டரிலிருந்து நிரந்தரமாகத் தடைசெய்யப்பட்டுள்ளார்.

ஆனால், சட்டத்துக்குப் புறம்பாக இல்லாத எந்த ஒரு கருத்துக்கும் ட்விட்டரில் இடமளிக்கப்பட வேண்டும் என்கிறார் மஸ்க். கருத்து பேச்சு சுதந்திரத்தின் முற்றுமுழுதான ஆதரவாளர் என்று தன்னை முன்வைக்கிறார். மேலும், பயனர்களுக்கு எந்தெந்த ட்வீட்களை முன்னிலைப்படுத்திக் காண்பிப்பது என்பதை முடிவுசெய்யும் அல்காரிதங்களில் வெளிப்படைத் தன்மையைக் கொண்டு வருவது, பேஸ்புக் பதிவுகளுக்கு இருப்பதுபோல் ட்வீட்களைத் திருத்துவதற்கான எடிட்டிங் வசதியை அறிமுகப்படுத்துவது, நபர்கள் மூலம் அல்லாமல் மென்பொருள் மூலம் இயக்கப்படும் ட்விட்டர் பாட் கணக்குகளை நீக்குவது, பிரபலங்களின் அதிகார பூர்வ கணக்குகளுக்கு மட்டுமே அளிக்கப்பட்டுவந்த நீலடிக் அங்கீகாரத்தைத் தனிநபர்களால் இயக்கப் படும் அனைத்து ட்விட்டர் கணக்குகளுக்கும் அளிப் பது உள்ளிட்ட பல மாற்றங்களைக் கொண்டுவரத் திட்டமிட்டிருக்கிறார் எலான் மஸ்க்.

### கருத்துச் சுதந்திரம் - அவதூறுகள்

மஸ்க் முன்வைக்கும் மாற்றங்கள் அனைத்துக்கும் நல்விளைவுகளும் உண்டு, தீய விளைவுகளும் உண்டு. கருத்துச் சுதந்திரத்துக்கு முற்றுமுழுதான ஆதரவு என்னும் பெயரில் ஆதாரமற்ற பொய்யான கருத்துகளையும் வசைகளையும் அனுமதிப்பது சமூகத்தில் தவறான தகவல்களைப் பரப்புவதோடு, தனிநபர்கள் மீதான தாக்குதல்களை இயல்பாக்கிவிடும். ஏற்கெனவே ட்விட்டரில் இவை அதிகமாக இருந்ததால்தான் ட்விட்டர் நிர்வாகம் தணிக்கை நடவடிக்கைகளைச் செயல்படுத்தி வந்தது. அவற்றிலேயே பல போதாமைகள் இருப்பதாக ஜனநாயகச் சிந்தனையாளர்களும் மனித உரிமைச் செயல்பாட்டாளர்களும் குற்றம்சாட்டிவருகையில், கருத்துச் சுதந்திரத்தின் பெயரில் இந்தத் தணிக்கை முறையை நீக்குவதோ மாற்றியமைப்பதோ நன்மையைவிடத் தீமையையே கொண்டுவரும் என்று அஞ்சப்படுகிறது.



அதே நேரம், இந்தத் தணிக்கை முறையை ட்விட்டர் நிறுவனம் தவறாகப் பயன்படுத்தியதற்கான குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படுகின்றன. 2020 அமெரிக்க அதிபர் தேர்தலை ஒட்டி, அமெரிக்க அதிபர் பதவிக்குப் போட்டியிட்ட ஜோ பைடன், அவருடைய மகன் ஹண்டர் பைடன் ஆகிய இருவர்மீது கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்த ‘நியூயார்க் போஸ்ட்’ கட்டுரை ட்விட்டரிலிருந்து நீக்கப்பட்டதைத் தீவிர வலதுசாரிகளும் குடியரசுக் கட்சியின் ஆதரவாளர்களும் கடுமையாக விமர்சிக்கிறார்கள்.

பொதுவாகவே, ட்விட்டர் நிறுவனம் இடது தாராளவாதப் போக்குக்கு ஆதரவாக இருப்பதாக தீவிர வலதுசாரிகள் குற்றம்சாட்டி வருகிறார்கள். ஜனநாயகக் கட்சி மீதான சாய்வும் அதிகமாக இருப்பதாகவும் கருதப்படுகிறது. இந்தப் பின்னணியில் மஸ்க் ட்விட்டரைக் கைப்பற்றியிருப்பது குடியரசுக் கட்சி ஆதரவு முகாமில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

### ஊழியர்களின் எதிர்காலம்

ட்விட்டரின் ஊழியர்கள் நிலை என்னவாகும் என்கிற கேள்விக்கு இப்போதைக்குத் தெளிவான விடை தெரியவில்லை. ஐந்தரை மாதங்களுக்கு முன் ட்விட்டர் சி.இ.ஓ.வாகப் பொறுப்பேற்ற பராக் அகர்வால், ட்விட்டரில் கணக்குகளை முடக்குவது உள்ளிட்ட போலித் தகவல் தடுப்பு நடவடிக்கைகளில் முக்கியப் பங்கு வகித்த சட்டப் பிரிவுத் தலைவர் விஜயா கட்டே உள்ளிட்ட இந்திய-அமெரிக்கர்கள் அந்தப் பதவிகளிலிருந்து நீக்கப்படுவார்கள் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

ட்விட்டரை மஸ்க் கைப்பற்றிய பிறகு நிகழ்ந்த ஊழியர் கூட்டத்தில் விஜயா கண்ணீர் சிந்தி அழுததாகச் செய்திகள் வெளியாகின. விஜயா கட்டேவை மஸ்க் கடுமையாக விமர்சித்து வருகிறார். நீக்கப்பட்டாலும் இவ்விருவரும் அதற்கான இழப்பீட்டுத் தொகையைப் பெறுவார்கள்.

பிற ஊழியர்கள் இந்த ஆண்டின் இறுதிவரை வேலையை விட்டு நீக்கப்பட மாட்டார்கள் என்று ஊழி யர்களுக்கிடையிலான கூட்டத்தில் பராக் அகர்வால் உறுதியளித்துள்ளார். ஊழியர்களை நீக்குவது அல்லது தக்கவைத்துக் கொள்வது குறித்து எலான் மஸ்க் இதுவரை எதுவும் பேசவில்லை.

ஆனால், ட்விட்டரைக் கைப்பற்றுவதற்கான தொகையில் கிட்டத்தட்ட பாதியை எலான் மஸ்க் ரொக்கமாகக் கொடுத்தாக வேண்டும். இதற்காகக் கடன் கொடுக்கும் வங்கிகளிடம் அவர் ட்விட்டரின் ஊழியர்கள் எண்ணிக்கையைக் குறைப்பது, ட்வீட்கள் மூலம் வருவாய் ஈட்டுவது உள்ளிட்ட நடவடிக்கைகளால் ட்விட்டரின் நிதிநிலைமையை மேம்படுத்தப் போவதாக உத்தரவாதம் அளித்திருக்கிறார் என்னும் செய்திகள் வெளியாகியுள்ளன.

லாப நோக்கத்தை முதன்மைப்படுத்தாத பொதுப் பங்கு நிறுவனமாக இருந்த ட்விட்டர், தனியார் நிறுவனமாக, பெரும்பணக்காரரான ஒற்றை நபரின் கட்டுப் பாட்டுக்குள் சென்றுள்ளது. தனிநபர்கள் எவ்வளவு ஜனநாயக விழுமியங்களைப் பேணுகிறவர்களாக, நவீன சிந்தனைகளைக் கொண்டவர்களாக இருந்தாலும் அவர்கள் முழுமையாக ஒரு விஷயத்தைக் கட்டுப்படுத்துவது ஜனநாயகத்துக்கு நல்ல தல்ல என்னும் குரல் முற்றிலும் புறக்கணிக்கத் தக்கதல்ல.


# இலங்கை நெருக்கடி இன்னும் மோசமாகும்:

## ரணில் விக்ரமசிங்க பரபரப்பு பேட்டி!

**பி**ரதமர் பதவி விலகுவதால் மட்டும் இலங்கையில் எந்தப் பயனும் ஏற்பட்டு விடாது, அரசின் கொள்கைகள் மாற வேண்டும் என்று முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க பிபிசி தமிழுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

வரும் மாதங்களில் நாட்டில் விலைவாசி உயர்ந்து நிலைமை இன்னும் மோசமாகும் என்றும் ரணில் கூறினார். இலங்கையில் 4 முறை பிரதமராகப் பதவிவகித்த ரணில் விக்ரமசிங்க, அதிக காலம் அந்தப் பதவியில் இருந்தவர். கடைசியாக 2018 டிசம்பர் முதல் 2019 நவம்பர் வரை பிரதமராக இருந்தார்.

தற்போதைய அரசை எந்த வகையிலும் ஆதரிக்கவில்லை என்று கூறியிருக்கும் ரணில், போராடும் மக்களை சமாதானப்படுத்த முடியவில்லை எனில் அரசு பதவி விலக வேண்டும் எனத் தெரிவித்தார். இந்தியா போன்ற நாடுகள் இலங்கைக்கு உதவுவதற்கு ஒரு எல்லை உண்டு என்று கூறிய அவர், இலங்கைய தன்னையே சீர்படுத்திக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார்.



அவர் அளித்த பேட்டியின் முழு வடிவம் கீழே.

**கே:** இலங்கைக்கு இந்த சிக்கல் ஏன் ஏற்பட்டது?

**ப:** ஏனெனில் நாம் பொருளாதாரத்தின் அடிப்படைகளை மறந்துவிட்டோம். இலங்கை பொருளாதாரத்தில் ஒரு மாற்றம் நிகழ்ந்து கொண்டிருந்தது. நிறைய சிக்கல்கள் இருந்தன. முக்கியமாக கடன் நிலைத்தன்மை மற்றும் பட்ஜெட் பற்றாக்குறை சார்ந்தவை. 2015ல் அவர் அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்ட போது ஒரு ஐஎம்எப் திட்டத்திற்கு உடன்பட்டோம். இது நமது அடிப்படை நிதி நிலையில் ஒரு உபரி இருக்க வேண்டும் என்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டது. நாம் உபரி நிலையை அடைந்தோம். அந்நியச் செலாவணி இருப்பை அதிகரித்தோம். ஆனால் அதைச் செய்வதற்கு நாங்கள் வரிகளை உயர்த்த வேண்டியிருந்தது.



இந்த அரசாங்கம் ஐஎம்எப் திட்டத்தையும் தொடர்பையும் தொடர்ந்திருந்தால், கோவிட் பின்னடைவுகளின் போதுகூட இந்த அரசாங்கம் வலுவாக இருந்திருக்கும். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை. 2019ல் அத்தனை வரிகளையும் குறைத்தார்கள். கார்பரேட் துறையினர் அரசாங்கத்திடம் சொன்னார்கள், வரிகளைக் குறைத்தால் பொருளாதாரம் பெருகும் என்று. ஆனால் 2020ன் முதல் காலாண்டில் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை.

வரிகளைக் குறைத்ததனால் ஐஎம்எப்-இடம் அவர்கள் போகவில்லை. அவர்கள் வரிகளை உயர்த்த விரும்பவில்லை. பிறகு கோவிட் வந்தது. நாம் நமது கையிருப்பிலிருந்ததை எடுக்கத் துவங்கினோம். 7 பில்லியனிலிருந்து, நிகர அளவில், 500 மில்லியனுக்கும் கீழே வந்துவிட்டோம். 200-300 மில்லியன் கூட இருக்காது. எனவே இது அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட ஒரு நெருக்கடி. உரங்களைத் தடை செய்ததனால் இது மேலும் மோசமானது. உணவு தட்டுப்பாடு ஏற்பட்டது. இது தொடர்ந்தது.

சந்தைப் பொருளாதாரத்திற்கு பதில் கட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தைக் கொண்டுவந்தார்கள். இது அந்நியச் செலாவணி கையிருப்பை காலி செய்துவிட்டது.

**கே:** இதற்கு காரணம் தற்போதைய அரசாங்கம் மட்டும் தானா, அல்லது முந்தைய அரசாங்கங்கள் கூடவா?

**ப:** தற்போதைய அரசாங்கம் என்று தான் சொல்வேன். ஐஎம்எப்இன் அறிக்கையை பார்த்தீர்களானால், இலங்கை ஐஎம்எப் திட்டத்தில் தொடரவில்லை என்று சொல்கிறது. அவர்கள் வரிகளையும் நிதியையும் குறைத்து விட்டார்கள் என்று சொல்கிறது.

சந்தைப் பொருளாதாரத்தில் இருந்து விலகியதுதான் விஷயம். 2019 வரை சந்தைப் பொருளாதாரம் இருந்தது. அது தொடர்ந்திருந்தால், இந்த அரசாங்கம் அரசியல் ரீதியில் அசைக்க முடியாததாக இருந்திருக்கும். ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை.

**கே:** இதைத் தவிர்த்திருக்க என்ன செய்திருக்க வேண்டும்?

**ப:** வருமான வரியைக் குறைத்திருக்கக் கூடாது. அடிப்படை நிதிநிலையில் உபரி இருப்பதை உறுதி செய்திருக்க வேண்டும். அந்நியச் செலவாணி ஈட்டலை அதிகரித்திருக்க வேண்டும். கோவிட் தாக்கியபோது ஐஎம்எப் - இடம் சென்றிருக்க வேண்டும்.

**கே:** கொழும்பிலும் தேசம் முழுதும் மிகப்பெரும் போராட்டங்கள் நடக்கின்றன. அவர்கள் அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் விலகச் சொல்கிறார்கள். இதுகுறித்து உங்கள் கருத்து?

**ப:** போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் பலரும் இந்த ஜனாதிபதிக்கும் இந்த அரசாங்கத்திற்கும் வாக்களித்தவர்கள். அவர்கள் கைவிடப்பட்டதாக உணர்கிறார்கள். 2019க்கு முன்புவரை நன்றாக வாழ்ந்தார்கள். தற்போது அவர்கள் வாழ்க்கைத் தரத்தை இழந்துவிட்டார்கள். இதற்கு பொறுப்பு அரசாங்கம் என்று சொல்கிறார்கள். அவர்கள் ஜனாதிபதி, பிரதமர், மற்றும் சில அமைச்சர்கள் பதவி விலகவேண்டும் என்று சொல்கிறார்கள்.

**கே:** இது மேலும் மோசமாவதைத் தடுக்க என்ன செய்ய வேண்டும்? எதாவது அற்புத மருந்து இருக்கிறதா?

**ப:** அற்புதங்கள் எதுவும் இல்லை. எதிர் கட்சிகள் போராட்டக்காரர்களோடு நின்றிருக்கிறார்கள். அவர்கள் பிரதமர் மற்றும் ஜனாதிபதி இருவரும் பதவி விலக வேண்டும் அல்லாவிடில் எந்த அரசாங்கத்தையும் ஆதரிக்க மாட்டோம் என்று சொல்கிறார்கள். அரசாங்கம் தங்கள் பெரும்பான்மையை தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

அரசாங்கத்திற்கு 113 இடங்கள் இல்லை. அதனால் அரசாங்கத்துடன் இருக்கும், மற்றும் வெளியேறிய உறுப்பினர்கள் மூலம் 113 இடங்களைப் பெறுவதாகச் சொல்கிறார்கள். புதிய பிரதமரை நியமிக்க விரும்புகின்றார்கள். ஆனால் அது வேலைக்கு ஆகாது.

நமக்கு அவர்கள் கொள்கைகள் தெரிய வேண்டும். இந்த சீரழிவுக்கு அவர்களில் பலரும் காரணமாக இருப்பதால், அவர்களது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்கிறார்களா என்பது தெரிய வேண்டும்.

**கே:** இடைக்கால அரசாங்கத்திலோ, வருங்கால அரசாங்கத்திலோ தங்கள் பங்கு என்னவாக இருக்கும்?

**ப:** இடைக்கால அரசாங்கத்தில் எனக்கு எந்த பங்கும் இல்லை. இலங்கையின் அரசியலமைப்புச் சட்டம் இடைக்கால அரசாங்கத்திற்கான எந்தவொரு ஏற்பாட்டையும் வழங்கவில்லை. இந்த அரசாங்கம் சென்றால், இன்னொரு அரசாங்கம் அமையவேண்டும்.

ஒரு வாரமோ, ஒரு வருடமோ, இரண்டு வருடங்களோ, அதுவல்ல பிரச்சனை. ஒரு அரசாங்கம் என்பது, ஒரு அரசாங்கம். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால், ஒரு பராமரிப்பு அமைச்சரவைக்கான ஏற்பாடு தான் உள்ளது.

**கே:** எதிர்காலத் திட்டங்கள் ஏதேனும்?

**ப:** எனக்குத் தனிப்பட்ட எதிர்காலத் திட்டங்கள் இல்லை. நான் அரசாங்கத்தின், மக்களின் எதிர்கால திட்டங்களைப் பற்றிச் சிந்திக்கிறேன்.

**கே:** அரசாங்கமோ, பிரதமரோ முடிவெடுக்கும் முன் உங்களை கலந்தாலோசிக்கிறார்களா?

**ப:** இல்லை. அது அரசாங்க விஷயம். நான் பிரதமரை நாடாளுமன்றத்திலோ, வெளியிலோ சந்திக்கிறேன். நாங்கள் நல்ல நட்புடன் இருக்கிறோம். ஆனால் அதற்காக நான் அரசாங்கத்தை ஆதரிக்கிறேன் என்று அர்த்தமல்ல.

**கே:** நாட்டிற்கு தலைமை ஏற்கவோ, இந்த சிக்கலிலிருந்து நாட்டை வெளிக்கொண்டு வரவோ தயாராக இருக்கிறீர்களா?

**ப:** சரியான திசையில் செல்லும் சரியான கொள்கைகள் இருந்தால் நாட்டை தற்போதைய நிலைமையிலிருந்து மீட்கலாம். அந்த சவாலை நாடாளுமன்றம் ஏற்றுக்கொள்ள விரும்புகிறதா என்பதுதான் கேள்வி. எதிர்காலம் நாடாளுமன்றம் என்ன செய்ய விரும்புகிறது என்பதைச் சார்ந்துதான் இருக்கிறது.

**கே:** இன்னும் ஆறு மாதங்களில் இலங்கையின் நிலைமை என்னவாக இருக்கும்?

**ப:** இன்னும் மோசமாகலாம்.

**கே:** எவ்வளவு மோசம்?

**ப:** மிக மோசமானவை இனிதான் வருமென்று சொல்லியிருக்கிறேன்.

**கே:** விளக்க முடியுமா?

**ப:** உதாரணத்திற்கு, விலைவாசி உயரும். எரி பொருள், அந்நியச் செலவாணி ஆகியவற்றின் தட்டுப்பாட்டால், தொழில்கள் மூடப்படும். வங்கிகள் நிறைய செயல்படாத கடன்களைத் தாங்கிக்கொண்டிருக்கின்றன. நீண்ட காலத்திற்கு அதைச் செய்ய முடியாது. இது கோவிட் பெருந்தொற்றினால் ஏற்பட்டது. நிறைய திவால்கள் நிகழும். இதன் பொருள் பொருளாதாரம் மோசமாகும் என்பதுதான்.

**கே:** இலங்கையை ஆதரிப்பதில் இந்தியாவின் பங்கு என்னவாக இருக்க வேண்டும்?

**ப:** கடன் வசதியை வழங்குவதன் மூலம் இந்தியா உதவி வந்திருக்கிறது. இரண்டாவது முறையாக எரிபொருள் தந்தும் உதவக்கூடும். ஆனால், இந்தியாவோ வேறெந்த நாடோ செய்யக்கூடிய உதவிக்கும் ஒரு அளவு இருக்கிறது. தேசத்தை முதலில் சீர்படுத்த வேண்டும்.

**கே:** இந்தியா மேலும் செய்வதற்கு எதாவது உள்ளதா?

**ப:** இந்தியா இலங்கையின் பொருளாதாரத்தைச் சரிபடுத்த முடியாது, அதை நாங்கள்தான் செய்ய வேண்டும்.

**கே:** தமிழ்நாடு இலங்கையை ஆதரிக்கத் தயாராக உள்ளது. எப்படி செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?

**ப:** அவர்கள் என்ன செய்ய விரும்புகிறார்கள் என்பதை அறிவித்திருக்கிறார்கள். ஆனால் இந்திய அரசு தங்களுடன் இணைந்து செய்யுமாறு கூறியிருக்கிறது. அது சரியானதாகப் படுகிறது.

**கே:** தற்போதைய நிலைமையும் போராட்டங்களும் மக்களை முதன் முறையாக ஒன்றிணைத்திருக்கிறது என்று நினைக்கிறீர்களா?

**ப:** பசி எப்போதும் மக்களை ஒன்றிணைக்கும்.

**கே:** இது அரசியலுக்கு நல்லது என்று நினைக்கிறீர்களா?

**ப:** ஒற்றுமையை விரும்பும் அனைவருக்கும் நல்லது. பிரிவினையை விரும்புபவர்களுக்கு அல்ல.

**கே:** மாகாண சபைகளுடன் அதிகாரத்தைப் பகிர்வதற்கும், 13வது சட்டத் திருத்தத்தை அமல்படுத்துவதற்கும் இது சரியான தருணம் என்று நினைக்கிறீர்களா?

**ப:** ஒன்றிணைந்த தேசத்தைப் பொறுத்தவரை 13வது சட்டத் திருத்தத்தை சரிசெய்வதற்கு இன்னும் இடம் இருக்கிறது என்று எப்போதும் நான் சொல்லி வந்திருக்கிறேன். பெரும்பாலான தமிழ் கட்சிகளும் இதை ஏற்கின்றன. இதற்கு ஒரு தீர்வு காண இது ஒரு வாய்ப்பு என்று நான் நினைக்கிறேன். ஆனால் அரசாங்கமும் அதையே நினைக்கிறதா என்று தெரியவில்லை.

**கே:** இப்போது முதலில் செய்யப்படவேண்டியது என்ன?

**ப:** முதல் படி- காலி முகத்திடலில் மட்டுமல்ல, நாடு முழுவதும் உள்ள போராட்டக்காரர்கள் சொல்வதை கேட்க வேண்டும். அதன்படி நடக்கவேண்டும். ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலக வேண்டும் என்று அவர்கள் சொல்கிறார்கள்.

அரசு ஒரு புதிய பிரதமரைக் கொண்டுவரப் பார்க்கிறது, ஆனால் ஜனாதிபதி பதவியிலேயே நீடிக்கிறார். அவர்கள் மக்களை சமாதானப்படுத்த முடியுமா? அது முடிந்தால் அரசாங்கம் தொடரலாம். இல்லையெனில் அது விலகிதான் ஆகவேண்டும்.

இரண்டாவதாக - பொருளாதாரத்தை மேம்படுத்த குறுகிய கால, இடைக்கால, நீண்டகால திட்டங்கள் வேண்டும்.

மூன்றாவதாக - மக்களிடையே இருக்கும் இந்த ஒற்றுமையை காக்க வேண்டும்.

நான்காவதாக - இளைய தலைமுறைக்கு புதிய விஷயங்கள் தேவைப்படுகின்றன. அவர்கள் வழமையான சமூகத்தின் மீதும் அரசியலின் மீதும் விரக்தியில் இருக்கிறார்கள். நாம் அவர்கள் கேட்பதை தரவேண்டும். அவர்கள் குரல்களும் கேட்கப்படுவதை உறுதி செய்யவேண்டும்.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL


- 1, 2 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட பகுதியைப் பூரணப்படுத்துவதற்குரிய மீதிப்பகுதியைத் தெரிவு செய்க.

01. வண்ணத்துப்பூச்சியின் ஒருபகுதி முன்னே தரப்பட்டுள்ளது.



(1) (2) (3)

02.



(1) (2) (3)

03. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



A B C D E F

இக் கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) A, C / D, E / B, F

(2) A, E / B, C / D, F

(3) C, F / B, D / A, E

04. **"பல்கலைக்கழகம்"** எனும் சொல்லிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய சொற்களைக் கொண்ட விடைத் தொகுதி எது?

(1) பல், பழம், பகல், கழகம், காலை, கல், பாகல்

(2) பல், கல்வி, பகல், கழகம், கலை, கல், பக்கம்

(3) பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம்


05. சந்திரன் தோன்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானத்தைப் பார்க்கும்போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக் கூட்டத்தைக் காணலாம் எனக் காவியா கூறுகின்றாள். இது நடைபெற இயலாது இதற்குக் காரணம்

(1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை.

(2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை.

(3) கிளிகள் கூட்டமாகப் பறந்து செல்லாமை.

06. உருக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிக.



(1) (2) (3)

07. உலக மரபுரிமை மையங்களாக ......................... நிறுவனத்தால் இலங்கையில் பாரம்பரிய இடங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டன. அவற்றுள் பொலன்னறுவை புராதன நகரம், அனுராதபுரம் புனிதநகரம், சிகிரியா புராதன நகரம், .............................. போன்றவை சில இடங்களாகும்.



முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களை தெரிவு செய்க.

(1) யுனிசெப், காலிக்கோட்டை

(2) யுனேஸ்கோ, யாழ்கோட்டை

(3) யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்)

## விடைகள்

| | | |
|---|---|---|
| 01. | (3) |  |
| 02. | (1) |  |
| 03. | (3) | C, F / B, D / A, E |
| 04. | (3) | பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம் |
| 05. | (2) | இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை. |
| 06. | (2) |  |
| 07. | (3) | யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்) |

கல்வி tv CHANNEL-1

**06.05.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

கல்வி tv CHANNEL - 2

**06.05.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# ஹர்த்தாலுக்கு கிழக்கு மக்களும் பூரண ஆதரவு வழங்கவேண்டும்

## மட்டு. தொழிற்சங்கங்கள் கோரிக்கை

மட்டக்களப்பு, மே 06

**நாடு தழுவிய வகையில் இன்று முன்னெடுக்கப்பட்டுள்ள ஹர்த்தாலுக்கு மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பூரண ஆதரவு வழங்கவேண்டும் என மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தொழிற்சங்கங்கள் இணைந்து கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளன.**

நாடு தழுவிய ரீதியில் நடந்து கொண்டிருக்கும் இந்தப் போராட்டத்துக்கு மட்டக்களப்பில் உள்ள இலங்கை ஆசிரியர் சேவை சங்கம், மட்டக்களப்பு வைத்திய அரச வைத்தியர்கள் சங்கம்,கிழக்கு பல்கலைக்கழக மாணவர் சங்கம், மட்டக்களப்பு வர்த்தக சங்கம், ஏறாவூர் வர்த்தக சங்கம், மட்டக்களப்பு மாவட்ட விவசாய சம்மேளனம், மட்டக்களப்பு மாவட்ட அழகுக் கலைஞர்கள் நிபுணர் சங்கம், இந்து லங்கா சமூக அமைப்பு,சமூக மாற்றத்திற்கான இயக்கம் என்பவை ஒன்றிணைந்து ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளன.

நேற்று மட்டக்களப்பு தாமரைக்கேணியில் ஒன்றுகூடிய தொழிற்சங்கங்கள் இணைந்து இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளன.

இன,மத பேதங்கள் பாராமல் நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அனைத்து தரப்பினரும் ஒன்றிணையவேண்டிய காலத்தின் கட்டாயத்தில் உள்ளதாகவும் அனைவரையும் ஆதரவு வழங்குமாறும் இதன்போது கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

மக்களை வதைக்கும் கொலைகார அரசாங்கத்தை விரட்டியடிப்போம், மக்கள் போராட்டத்தை வெற்றி பெறச்செய்வோம் என்னும் தொனிப்பொருளில் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ)



# கஜமுத்துக்களுடன் ஒருவர் கைது!

அம்பாறை, மே. 06

சட்டவிரோதமான முறையில் கஜமுத்துகளை விற்பனை செய்ய முற்பட்ட குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவரை விசேட அதிரடிப் படையினர் கைதுசெய்தனர்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அம்பாறை மாவட்டம் பொத்துவில் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அறுகம்பை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு சந்தேக நபர் தனியார் விடுதி ஒன்றில் வைத்து கைதானார்.

குறித்த கஜமுத்துக்கள் விற்பனைக்காக எடுத்து வரப்பட்ட நிலையில் விசேட அதிரடிப்படையின் சூட்சுமமான முறையில் சந்தேக நபருடன் உரையாடி கைது செய்தனர்.

சந்தேக நபரிடமிருந்து யானை கஜ முத்துக்கள் -07 , சிற்பி முத்து -6 என்பன கைப்பற்றப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

(அ)



# மாளிகைக்காடு ஸபீனா முஸ்லிம் பாடசாலை வித்தியாரம்ப நிகழ்வு

மட்டக்களப்பு, மே.06

கல்முனை கல்வி வலய மாளிகைக்காடு ஸபீனா முஸ்லிம் வித்தியாலயத்திற்கு தரம் ஒன்றுக்கு மாணவர்களை இணைக்கும் 2022 ஆம் ஆண்டின் வித்தியாரம்ப நிகழ்வு மிகவும் சிறப்பாக பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். அஸ்மி தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நேற்றுநடைபெற்றது.

பாடசாலை நிறைவேற்றுக் குழு ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வில் இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும் சிரேஷ்ட விரிவுரையாளருமான ஏ.எம். றஸ்மி பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் மக்கள் வங்கி ஒலுவில் கிளை முகாமையாளர் திருமதி சித்தி றினோசா, காரைதீவு கோட்டக்கல்வி அதிகாரி ஜே.டேவிட் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்துகொண்டு வித்தியாரம்ப நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

இந்நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (அ)

# திருகோணமலை அரசாங்க அதிபராக பி.எச்.என்.ஜயவிக்ரம கடமையேற்றார்

திருமலை, மே. 06

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரியான பி.எச்.என்.ஜயவிக்ரம தமது கடமைகளை நேற்று உத்தியோகபூர்வமாக மாவட்ட செயலகத்தில் பொறுப்பேற்றார்.



சமய அனுஷ்டானங்களுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் காலை 9.20 சுப நேரத்தில் ஒப்பமிட்டு தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

1992 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவை திறந்த போட்டிப்பரீட்சை மூலம் இச்சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்ட இவர் மெதிரிகிரிய உதவி பிரதேச செயலாளர், ஹிக்கடுவ உதவி பிரதேச செயலாளர், மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சின் பிரதி பணிப்பாளர் ஆகிய பதவிகளையும் வகித்துள்ளார்.

மேலும் பிரதமர் அலுவலகத்தின் உதவிச் செயலாளர், குடிவரவு மற்றும் குடியகழ்வு திணைக்களத்தின் பிரதி கட்டுப்பாட்டாளர், கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் தொழில் முயற்சிகள் ஊக்குவிப்பு திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர், மத்திய மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் ஆணையாளர், மத்திய மாகாண விவசாயம், சிறிய நீர்ப்பாசனம், கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி திணைக்களத் தின் செயலாளராகவும் கடமையாற்றி இவர் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராக நியமிக்கப்பட முன்னர் மத்திய மாகாண சுகாதாரம், சுதேச வைத்தியம்,சமூக நலன்புரி,நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை அமைச்சின் செயலாளராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (அ)

# போரதீவில் யானைகள் அட்டகாசம்!

மட்டக்களப்பு, மே 06

மட்டக்களப்பு - போரதீவுப்பற்று பிரதேச சபைக்கு உட்பட்ட வெல்லாவெளி விவேகானந்தபுரம் தளவாய் பகுதியில் போரதீவுப்பற்று பிரதேச சபையால் பராமரிக்கப்படும் கழிவுகளை சேமிக்கும் இடத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

யானைகளின் பிரசன்னம் அதிகமாகயிருந்த காரணத்தால் வனஜீவராசி திணைக்கள அதிகாரிகளின் துணையுடன் கழிவுகளை கொட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், காட்டுப் பகுதியில் இருந்து யானை துரத்தி வந்த போது அங்கிருந்த வாகனங்கள் பின்னோக்கி நகர்த்தப்பட்டன.

இதன்போது வாகனங்கள் ஒன்றுடனொன்று மோதி, விபத்துக்குள்ளானதில் இரண்டு வாகனங்களும் கடும் சேதமடைந்தன என்று பிரதேச சபை ஊழியர்கள் தெரிவித்தனர்.

தொடர்ந்து பிரதேச வன ஜீவராசிகள் அலுவலக உத்தியோகத்தர்கள் வெல்லாவெளி வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து அங்கிருந்து வனஜீவராசிகள் அதிகாரிகள் வாகன உதவியுடன் வருகைதந்து சேதமடைந்த வாகனங்களை மீட்டனர். (ஐ)

# அரச ஒசுசல கிளை ஒன்று திறக்குமாறு கோரிக்கை

மட்டக்களப்பு, மே.

பொத்துவில் நகரில் அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் (அரச ஒசுசல) கிளை ஒன்றை திறக்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரச ஒசுசல கிளை ஒன்று இல்லாமையினால் தமக்குத் தேவையான மருந்துகளை பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

பொத்துவில், லாகுகல, பாணம, கோமாரி ஆகிய பிரதேசங்களில் சுமார் 70 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் அவர்களுக்கு தேவையான மருந்து வகைகளை தனியார் மருந்து விற்பனை நிலையங்களிலேயே கொள்வனவு செய்து வருகின்றனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ள தோடு, அவசரத் தேவைகளுக்கு மருந்துகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலைக்கு ஆளாகியுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

நோயாளிகள் அரச ஒசுசலவில் மருந்தைக் கொள்வனவு செய்வதற்கு சுமார் 40 கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள அக்கரைப்பற்று, நிந்தவூர் ஆகிய பிரதேசங்களுக்குச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் நோயாளர்கள் பல அசௌகரீகங்களை எதிர்கொள்வதோடு பொருளாதார ரீதியாக பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் பல கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தும் பொத்துவில் பிரதேசத்தில் அரச ஒசுசல திறக்காமையையிட்டு மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (அ)

# மூதூர் இறால்குழி பாலம் அருகே இளைஞர் ஒருவரின் சடலம் மீட்பு!

திருமலை, மே. 06

மூதூர் - இறால்குழி பாலத்துக்கு அருகில் இளைஞன் ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் கரையொதுங்கியுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் மூதூர் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய ஒருவரென பொலிஸார் தெரிவித்தனர்.

மீன்பிடிப்பதற்காக கடந்த திங்கட்கிழமை மாலை கடலுக்குச் சென்ற இளைஞரொருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# சனிக் கிரகத்தில் இன்னுமொரு பூமி!

*நியூயோர்க், மே 06*

சனிக் கிரகத்தின் குடும்பம் அருகே பூமியைப் போலவே தோற்றமளிக்கும் துணைக்கோள் ஒன்றை அமெரிக்காவின் ஸ்ரான்போர்ட் பல்கலைக்கழக விஞ்ஞானி மத்யூ வபோட்ரா தலைமையிலான குழு கண்டுபிடித்துள்ளது.



சூரியனில் இருந்து ஆறாவதாக சனி கோள் உள்ளது. சூரியன் - சனி இடையிலான தூரம் 147 கோடி கி.மீ. பூமிக்கு துணைக் கோளாக சந்திரன் இருப்பது போல சனி கிரகத்துக்கு 82 துணைக் கோள்கள் உள்ளன. இதனால் சனி கிரகமும் ஒரு சிறிய சூரிய குடும்பம் போல உள்ளது.

இந்த 82 நிலவுகளில் மிகப்பெரியதான “ரைட்டன்” நிலவு இன்னொரு பூமியை போல உள்ளது என கண்டறிந்துள்ளனர். ரைட்டன் நிலவில் ஆறு குளங்கள் உள்ளதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

மேலும் மனிதர்கள் வாழ்வதற்கு ஏற்ற தட்பவெப்ப நிலை உள்பட பூமியில் இருக்கும் அனைத்து அம்சங்களும் இருப்பதால் இதை “பூமி 2.0” என்றும் விஞ்ஞானிகள் அழைக்கின்றனர். பருவ நிலைகளால் இயக்கப்படும் உலகளாவிய மணல் சுழற்சியின் காரணமாக உருவான இந்த ரைட்டனின் மேற்பரப்பில் உள்ள ஏரிகள் பூமியில் இருப்பதைவிட வெவ்வேறு பொருட்களால் நிரம்பியுள்ளன.

ரைட்டனின் பனிக்கட்டி மேற்பரப்பில் படிந்துள்ளன. நைதரசன் காற்று ஹைட்ரோ காபன் மணல் திட்டுகளை உருவாக்குகிறது. ரைட்டனின் தனித்துவமான குன்றுகள், சமவெளிகள், சமதளமான நிலப்பரப்புகளை எவ்வாறு உருவாக்க முடியும் என்பதை விஞ்ஞானிகள் குழு வெளிப்படுத்தியுள்ளது.

# அணு ஆயுத பயிற்சியில் ரஷ்ய இராணுவத்தினர்!

## - உக்ரைன்மீதான தாக்குதலுக்கு முஸ்தீபா? -

மொஸ்கோ, மே 06

**உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்ய படைகள் அணு ஆயுத தாக்குதல்களை நடத்துவதற்கான போர் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**



உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து 70 நாட்கள் கடந்துள்ளன. இந்நிலையில், உக்ரைனும் ரஷ்யாவுக்கு தகுந்த பதிலடி கொடுத்து வருகின்றது. நீடிக்கும் இந்தப் போரில், ஒரு கோடியே 30 இலட்சம் பேர் அகதிகளாகியுள்ளனர். ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

இதனிடையே, உக்ரைனுக்கு உதவ வேண்டாம் என்று ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளுக்கு ரஷ்யா எச்சரித்தது. மீறி உதவினால் அணு ஆயுதத் தாக்குதல் நடைபெறும் என்றும் எச்சரித்திருந்தது.

இந்நிலையில், பால்டிக் கடலில் ரஷ்யா கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கக் கூடிய - அணு ஆயுதங்களை சுமந்து செல்ல வல்ல ஏவுகணைகளை ஏவி ரஷ்ய படைகள் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன.

இதற்காக விமான தளங்கள், பாதுகாக்கப்பட்ட உட்கட்டமைப்புகள், இராணுவ சாதனம் மற்றும் முகாம்கள் ஆகியவற்றை போலியாக உருவாக்கி, அவற்றை இலக்குகளாக கொண்டு ஒன்று முதல் பல்வேறு முறை மின்னணு முறையிலான தாக்குதல்களை தொடுத்து பயிற்சி மேற்கொண்டனர்.

இந்த பயிற்சியில், ரஷ்ய வீரர்கள் தாக்குதல் நடத்திய பின்னர் தங்கள் இருப்பிடங்களை மாற்றி கொண்டனர். எதிரிகளின் பதிலடியில் இருந்து தப்பிப்பதற்காக இந்த முறையை அவர்கள் கையாண்டுள்ளனர்.

இதேபோன்று கதிரியக்கம் மற்றும் இரசாயன வீச்சு ஆகிய தாக்குதல்களுக்கும் வீரர்கள் பயிற்சிகளை பெற்றனர். இதில் 100க்கும் மேற்பட்ட ரஷ்ய படையினர் பங்கேற்றனர்.

இதனால், ரஷ்யா தனது போரின் ஒரு பகுதியாக அணு ஆயுதங்களை பயன்படுத்துவதற் கான சாத்தியம் பற்றி உலக நாடுகளிடையே விவாதிக்கப்பட்டு வருகிறது. ஒருவேளை அணு ஆயுதங்களை பயன்படுத்தி போர் நடத்தப்பட்டால் அதனால், மக்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாக நேரிடும். (ஐ)

# 40 வயதுக்கு மேற்பட்டோருக்கு 7 மணி நேர தூக்கம் கட்டாயம்!

## புதிய ஆய்வில் தகவல்

*நியூயோர்க், மே 06*

40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தினமும் 7 மணி நேர தூக்கம் மிகவும் அவசியம். இது அறிவாற்றலை பெருக்குவதுடன், நினைவாற்றல் இழப்பிலிருந்து தடுக்கிறது என்று ஆய்வில் தெரிய வந்துள்ளது.

பொதுவாக ஒருவருக்கு 8 மணி நேர தூக்கம் அவசியம். ஆனால், இன்றைய தொழில் நுட்ப உலகில் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் தூக்கத்தை தொலைத்துள்ளார்கள். இது தொடர்பில் ஆய்விலேயே இந்த விடயம் வெளிவந்தது.

மேலும், 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், 7 மணிநேர தூக்கம் ஒருவரின் அறிவாற்றல் திறனை மேம்படுத்தி, டிமென்ஷியா எனப்படும் நினைவாற்றல் இழப்பிலிருந்து நம்மைப் பாதுகாத்து மன ஆரோக்கியத்திற்கு வழி வகுக்கிறது என்கிறது. “நேச்சர் ஏஜிங்க்” என்ற இதழ் தெரிவித்துள்ளது.

7 மணி நேரத்துக்கும் குறைவான தூக்கம் உடைவர்களுக்கு நினைவாற்றல் குறைபாடு, புதிய விடயங்களை கற்றுக் கொள்வது, கவனம் செலுத்துவது, முடிவெடுப்பது, சிக்கலைத் தீர்ப்பது ஆகியவைகளில் பாதிப்பு ஏற்படுகிறது என்றும் அந்த ஆய்வு கூறுகிறது.

எவ்வளவு நேரம் தூங்குகிறோம் என்பதைப் போலவே எப்படித் தூங்குகிறோம் என்பதும் மிகவும் முக்கியம். வயது அதிகமாகும் போது, ஆழ்ந்து தூங்குகிறோமா என்பதும் முக்கியம். அப்படித் தூங்குவது மூளையின் ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கிறது. நல்லத் தூக்கம் எல்லா வயதினருக்கும் அவசியம்



என்றாலும், வயதாகும் போது இரவில் நன்றாக உறங்குவதற்கான வழிகளை நாம் கண்டறிவது, நல்ல மனநலன், ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கும் நினைவாற்றல் இழப்புகளைத் தவிர்ப்பதற்கும் உதவுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வெள்ளிக் கிரகத்தின் ஆய்வுக்காக விண்கலம் அனுப்புகிறது “இஸ்ரோ”

*புதுடில்லி, மே 06*

சல்பியூரிக் அமில மேகங்கள் சூழ்ந்து மிகவும் வெப்பமான கிரகமாகக் காணப்படும் வெள்ளி கிரகத்திற்குள், என்ன என்ன இருக்கிறது என்பதை ஆய்வு செய்ய இஸ்ரோ விண்கலத்தை அனுப்ப திட்டமிட்டுள்ளது.

2024 டிசெம்பரில் வெள்ளி கோளுக்கு விண்கலத்தை அனுப்ப இஸ்ரோ முடிவு செய்துள்ளது. அப்போது வெள்ளி கோளும், பூமியும் மிகவும் நெருக்கமாக நேர் கோட்டில் அமைந்திருக்கும்.

அதனால் விண்கலத்தை குறைந்த அளவு உந்துசக்தியைப் பயன்படுத்தி வெள்ளி கோளின் சுற்றுப்பாதையில் நிலைநிறுத்த முடியும். இதேபோன்ற அடுத்த வாய்ப்பு 2031இல்தான் கிடைக்கும்.

வெள்ளி கோளுக்கான இந்த திட்டத்தில் அந்த கிரகத்தில் செயலில் உள்ள எரிமலைகள், வளிமண்டலத்தின் அமைப்பு, கலவை, விசை ஆகியவை ஆய்வு செய்யப்படும்.

வெள்ளியின் அயனியாக்கப்பட்ட வளிமண்டலத்தில் சூரிய துகள்களின் செயல்பாடு போன்றவற்றை ஆராய்வர்.

“வெள்ளி கிரகத்திற்கான திட்டம் உருவாகியுள்ளது. திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, அதற்கான நிதி அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்தியாவிடம் இன்றைக்கு இருக்கும் திறனால் வெள்ளி கிரகத்திற்கான விண்கலனை உருவாக்கி அதனை வெள்ளியின் வட்டப்பாதையில் நிலைநிறுத்த முடியும்.

அதனை மிகக் குறுகிய காலத்தில் செய்யும் திறன் இந்தியாவிடம் உள்ளது”, என்று இஸ்ரோ தலைவர் சோம்நாத் கூறியுள்ளார். (ஐ)

# கொங்கோவில் மீண்டும் எபோலா வைரஸ் தாக்கம்!

*கின்ஷசா, மே 06*

ஆபிரிக்க நாடான கொங்கோவில் மீண்டும் எபோலா வைரஸ் பரவத் தொடங்கி உள்ளது. இதனைத் தொடர்ந்து தடுப்பு நடவடிக்கையில் கொங்கோ அரசு ஈடுபட்டுள்ளது.

கொங்கோவில் உள்ள ஈக்வடார் மாகாணத்தில் பண்டகா பகுதியில் கடந்த ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி, ஒருவருக்கு எபோலா வைரஸ் உறுதி செய்யப்பட்டது. எபோலா தாக்கிய நபர் ஏப்ரல் 21 ஆம் திகதி உயிரிழந்தார். இதனை கொங்கோவின் சுகாதாரத் துறை அமைச்சகம் உறுதிச் செய்துள்ளது. எபோலாவால் உயிரிழந்தவருடன் தொடர்பில் இருந்த 267 பேர் கண்டறிந்துள்ளனர். தொடர்ந்து அவர்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் நடத்தப்படுகின்றது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களுக்கு தடுப்பூசிகளையும் கொங்கோ அரசு செலுத்தி வருகின்றது.

எபோலா வைரஸ் கடந்த 1976 ஆம் ஆண்டு கண்டறியப்பட்டது. இந்தத் தொற்றால் இதுவரை 15 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். 2013 முதல் 2016 வரை எபோலா மேற்கு ஆபிரிக்காவைக் கடுமையாக அச்சுறுத்தியது. சுமார் 11,000 பேர் இந்தக் காலகட்டத்தில் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



பெங்களூர் அணியிடம் தோல்வி

# இறுதிச் சுற்று வாய்ப்பை சென்னை இழக்கும்நிலை!




மும்பை, மே 06

பெங்களூர் அணிக்கு எதிரான ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 13 ஓட்டங்களால் தோல்வியை தழுவியது.

174 ஓட்டங்கள் என்ற இலக்கை துரத்திய சென்னை அணிக்கு ஆரம்ப இணை, நல்ல அடித்தளம் அமைத்து கொடுத்தது. ருதுராஜ் கெய்க்வாட் மற்றும் டெவன் கொன்வே பவர் பிளே முடியும்வரை நீடித்தது.

6 ஓவர்களில் 50 ஓட்டங்களை கடந்த போது ருதுராஜ் கெய்க்வாட் 28 ஓட்டங்களுக்கு முதல் விக்கெட்டாக நடையை கட்டினார். அடுத்த சில நிமிடங்களில் ரொபின் உத்தப்பா ஓர் ஓட்டத்தோடு ஆட்டமிழக்க, அம்பதி ராயுடுவும் 10 ஓட்டங்களுடன் வெளியேறினார். இதனால், சென்னை அணி அதிர்ச்சியில் மூழ்கியது.

75 ஓட்டங்கள் எடுப்பதற்குள் மூன்று விக்கெட்களை இழந்து தடுமாறிய சென்னை அணிக்கு கொன்வே மற்றும் மொயின் அலி இணைந்து சில ஓவர்கள் ஓட்டங்களை சேர்த்தனர். 15ஆவது ஓவரில் கொன்வே 56 ஓட்டங்களுக்கும், 17ஆவது ஓவரில் மொயின் அலி 34 ஓட்டங்களுக்கும் ஆட்டமிழக்க, டோனி உள்ளிட்ட பின்வரிசை வீரர்கள் சோபிக்கத் தவறினர். டுவைன் பிரிட்டோரியஸ் மட்டும் இரு வரிசை இலக்க ஓட்டத்தைத் தொட மற்ற பின்வரிசை வீரர்கள் அனைவரும் ஒற்றை வரிசை இலக்க ஓட்டத்துடன் வருவதும் போவதுமாக இருந்தனர்.

இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் சென்னை அணி 8 விக்கெட்களை இழந்து 160 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. இதன்மூலம் 13 ஓட்டங்களால் தோல்வியை தழுவியது.

பெங்களூர் அணியின் பந்துவீச்சில் ஹர்சல் பட்டேல் அதிகபட்சமாக 3 விக்கெட்களும், மக்ஸ்வெல் இரண்டு விக்கெட்களும் வீழ்த்தினர்.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற சென்னை அணியின் தலைவர் டோனி, களத்தடுப்பைத் தெரிவு செய்தார். பெங்களூர் அணிக்காக விராட் கோலி மற்றும் டூ பிளசிஸ் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர். இருவரும் முதல் விக்கெட்டுக்காக 62 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்தனர்.

டூ பிளசிஸ், 22 பந்துகளில் 38 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து மக்ஸ்வெல் மற்றும் கோலி அடுத்தடுத்து தங்கள் விக்கெட்டை இழந்தனர். அடுத்துவந்த பட்டிதர், லோம்ரோர் ஆகியோர் இணைப்பாட்டமாக 44 ஓட்டங்களை எடுத்தனர். இது அந்த அணிக்கு முக்கிய கூட்டணியாக அமைந்தது.

15 பந்துகளில் 21 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தரார் பட்டிதர். 27 பந்துகளில் 42 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார் லோம்ரோர்.

தினேஷ் கார்த்திக், 17 பந்துகளில் 26 ஓட்டங்கள் எடுத்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 173 ஓட்டங்கள் எடுத்தது பெங்களூர்.

சென்னை அணிக்காக மகேஷ் தீக்ஷன (3 விக்கெட்), மொயின் அலி (2 விக்கெட்) மற்றும் பிரிட்டோரியஸ் (1 விக்கெட்) கைப்பற்றியிருந்தனர். (ஐ)

# மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் சிமோனா அதிர்ச்சி தோல்வி!



மட்ரிட், மே 06

மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் காலிறுதி ஆட்டத்தில் பிரபல வீராங்கனையான சிமோனா ஹாலேப் தோல்வியைத் தழுவினார்.

ஸ்பெயின் தலைநகர் மட்ரிட்டில் உலக ரென்னிஸ் சங்கத்தின் தொடர் நடக்கிறது. இதன் காலிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் நடந்தன.

இதில் ஒன்றில் பிரபல வீராங்கனையான ருமேனியாவின் சிமோனா ஹாலேப், துனீசியாவின் ஜபேயுரை எதிர்கொண்டார். இதில், 6 - 2, 6 - 2 என்ற செற் கணக்கில் ஜபேயுர் இலகுவாக வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

ஏனைய போட்டிகளில் அமெரிக்காவின் பெகுலா, சுவிற்சர்லாந்தின் ரெய்க்மன், அலெக்சாண்ரோவா ஆகியோர் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறினர். (ஐ)

# சம்பியன்ஸ் லீக் தொடர் லிவர்பூல் இறுதிக்கு தகுதி

லிவர்பூல், மே 06

ஐரோப்பாவின் சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டத் தொடரின் அரையிறுதியில் வில்லாரியல் அணியை வீழ்த்திய லிவர்பூல், முதல் அணியாக இறுதியாட்டத்துக்கு முன்னேறியது.

இந்தப் போட்டியில் 10ஆவது முறையாக இறுதியாட்டத்துக்கு வந்திருக்கிறது அந்த அணி. இலங்கை நேரப்படி செவ்வாய்க்கிழமை நள்ளிரவு நடைபெற்ற 2ஆவது பகுதி அரையிறுதி ஆட்டத்தில் லிவர்பூல் 3-2 என்ற கோல் கணக்கில் வில்லாரியலை தோற்கடித்தது. முன்னதாக, முதல் பகுதியிலும் 2-0 என்ற கோல் கணக்கில் வென்றிருந்த லிவர்பூல், மொத்த மதிப்பீட்டு அடிப்படையில் 5-2 என்ற கோல் கணக்கில் வென்றிருக்கிறது.

செவ்வாய்க்கிழமை ஆட்டத்தில் லிவர்பூல் அணிக்காக பாபினோ (62'), லூயிஸ் டியாஸ் (67'), சாடியோ மனே (74') ஆகியோரும், வில்லாரியலுக்காக பௌலாயே டியா (3'), பிரான்சிஸ் காகேலின் (41') ஆகியோரும் கோலடித்திருந்தனர். இந்த ஆட்டத்தில் அடித்த கோல் மூலமாக, சம்பியன்ஸ் லீக் போட்டியின் நொக் - அவுட் நிலையில் அதிக கோல்கள் (15) அடித்த ஆபிரிக்க வீரர் என்ற பெயரை சாடியோ மனே பெற்றுள்ளார்.

இறுதியாட்டம் பாரிஸில் வரும் 28ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில், மன்செஸ்டர் சிற்றி அல்லது ரியல் மட்ரிட் அணிகளில் ஒன்றை லிவர்பூல் எதிர்கொள்ளும். (ஐ)



# எல். பி. எல். தொடரின் தலைவர் விலகினார்!



கொழும்பு, மே 06

இலங்கைக் கிரிக்கெட் சபை நடத்தும் லங்கா பிறீமியர் லீக் தொடரின் இயக்குநரான ரவீன் விக்கிரமரட்ன அந்தப் பதவியிலிருந்து விலகியுள்ளார் என்று இலங்கைக் கிரிக்கெட் சபை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

லங்கா பிறீமியர் லீக் இரண்டு முறை இடம்பெற்றுள்ளது. இந்தத் தொடருக்கான போட்டித் தலைவராக இலங்கைக் கிரிக்கட் சபையின் உப தலைவர் ரவீன் விக்கிரமரட்ன செயல்பட்டு வந்தார். இந்த ஆண்டு மூன்றாவது தொடரை ஓகஸ்ட் மாதம் நடத்தத் திட்டமிடப்பட்டது.

இந்நிலையிலேயே ரவீன் எல். பி. எல்லின் தலைவர் பதவியிலிருந்து விலகியுள்ளார். அவருக்கு பதிலாக சமந்த தொடங்வெல நியமிக்கப்பட்டுள்ளாரென இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. (ஐ)

# சன்ரைசர்ஸ் அணிக்காக புதிய வீரர் வருகின்றார்!



ஹைதராபாத், மே 06

காயத்தால் வேகப்பந்து வீச்சாளர் சௌரப் துபே விலகியமையால் புதிய வீரரை சன்ரைசர்ஸ் அணி தெரிவு செய்துள்ளது.

ஐ. பி. எல். 2022 போட்டியில் சன்ரைசர்ஸ் அணி, 9 போட்டிகளில் 5இல் வெற்றி பெற்று 10 புள்ளிகளுடன் 5ஆம் இடத்தில் உள்ளது.

ஐ. பி. எல். ஏலத்தில் சௌரப் துபேயை தெரிவு செய்தது சன்ரைசர்ஸ் அணி. ஆனால், அவருக்கு முதுகில் காயம் ஏற்பட்டமையால் தொடரிலிருந்து விலகியுள்ளார்.

தற்போது அவருக்குப் பதிலாக இடது கை வேகப்பந்து வீச்சாளர் சுசாந்த் மிஸ்ராவை எடுத்துள்ளது சன்ரைசர்ஸ்.

2020இல் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற 19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கிண்ணப் போட்டியில் இந்திய அணிக்காக சுசாந்த் மிஸ்ரா விளையாடினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விமான கொள்வனவு ஒத்திவைப்பு!

கொழும்பு, மே 06

"சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு புதிய விமானங்களை கொள்வனவு செய்யும் திட்டம் மூன்று மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது."

இவ்வாறு கோப் குழுவின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் சரித்த ஹேரத் தெரிவித்தார்.

கோப் குழுவின் அறிக்கை நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதன் போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

எனினும், தற்போதைய சூழ்நிலையில் விமானக் கொள்வனவு இடம்பெறக்கூடாது என ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்தார். (அ)

# மரண அறிவித்தல்

தோற்றம்
20 - 05 - 1938



மறைவு
03 - 05 - 2022

## திருமதி சிவபாக்கியம் மார்க்கண்டு

யாழ். புங்குடுதீவு 8ஆம் வட்டாரம் மடத்துவெளியைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வதிவிடமாகவும் கொண்ட சிவபாக்கியம் மார்க்கண்டு அவர்கள் 03.05.2022 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், சுப்பையா பொன்னு தம்பதிகளின் அன்பு மருமகளும்,மார்க்கண்டு அவர்களின் அன்பு மனைவியும்,தனபாலன், குணபாலன், மோகனபாலன் ஆகியோரின் பாசமிகு தாயாரும்,ரஞ்சிதமலர், தயாபரேஸ்வரி, விஜயானந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும்,காலஞ்சென்றவர்களான நடராஜா, தர்மலிங்கம், இலட்சுமி மற்றும் நல்லதங்கம்(சுவிஸ்), இராஜேஸ்வரி(சீதா- பெல்ஜியம்), காலஞ்சென்றவர்களான செல்லம்மா, செல்லத்துரை, நாகம்மா, குணமாலை, சிவக்கொழுந்து, பொன்னுத்துரை, சின்னத்துரை மற்றும் இரத்தினம்(சுவிஸ்), காலஞ்சென்ற பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பத்மாவதி, புஸ்பவதி(பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான நல்லையா, தம்பியையா, முருகானந்தன், வேலாயுதபிள்ளை மற்றும் தவநிதி(தவமணி- கனடா), காலஞ்சென்ற விசாலாட்சி, கனகசுந்தரம் மற்றும் சிவநிதி, திலோத்தமை, விஜயலட்சுமி மற்றும் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், தங்கமுத்து, சின்னத்தம்பி, சின்னத்தங்கச்சி மற்றும் லெட்சுமி (செல்லம்மா- கனடா), செல்லத்தம்பி, முத்துத்தம்பி, காலஞ்சென்ற சுந்தரம் மற்றும் குணவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும்,நிரோத்சன், காலஞ்சென்ற நிதர்சன், வசீகா, லவ்சன், திவ்வியா, பரிஸ்யா, திவாகர், கீர்த்தனன், கவிஷ்னன், கிருஷ்ணிகா, வாகீசன், ஜீலியன், லக்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆரியன், ஈழன், கைலன், கைராசக்தி, ரேடன்சாயி, நைலன், நெலியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

பார்வைக்கு
Saturday, 07 May 2022 6:00 PM - 9:00 PM
Sunday, 08 May 2022 2:30 PM - 3:30 PM
Lotus Funeral and Cremation Centre Inc. 121 City View Dr, Etobicoke, ON M9W 5A8, Canada

கிரியை
Sunday, 08 May 2022 3:30 PM - 5:00 PM
Lotus Funeral and Cremation Centre Inc. 121 City View Dr, Etobicoke, ON M9W 5A8, Canada

தகனம்
Sunday, 08 May 2022 5:00 PM - 5:30 PM
Lotus Funeral and Cremation Centre Inc. 121 City View Dr, Etobicoke, ON M9W 5A8, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு:
**தனபாலன் - மகன்** Mobile : +16472905856
**குணபாலன் - மகன்** Mobile : +33619280222
**மோகனபாலன் - மகன்** Mobile : +14168417679
**சீதா - சகோதரி** Mobile : +32486591032
**சியாமளா - பெறாமகள்** Mobile : +94778973512

# சஜித் பிரேமதாஸவின் தாயாரும் திருக்குமார் நடேசனை சந்தித்தார்

## பாராளுமன்றில் முஸம்மில் குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 06

பண்டோரா இரகசிய ஆவணங்கள் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள வர்த்தகரான திருக்குமார் நடேசனை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் தாயார் சந்தித்தார் என பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸம்மில் நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.

அரசாங்கத்தில் இருந்து சுயாதீனமாக செயற்படுவதாக கூறும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அரசாங்க உறுப்பினர்களுக்கும் இடையில் இணக்கங்கள் இருப்பதாக எதிர்க்கட்சியினர் நேற்று குற்றம் சுமத்தினர்.

அத்துடன் சுயாதீன உறுப்பினர்கள் ராஜபக்ஷர்களை பாதுகாக்கும் பணிகளிலேயே ஈடுபட்டுள்ளதாக எதிர்கட்சியினர் குறிப்பிட்டனர்.

இந்த நிலையிலேயே சஜித் பிரேமதாஸவின் தாயார், திருக்குமார் நடேசனை சந்தித்ததாகவும் எனினும் திருக்குமார் நடேசனுக்கு எதிராக சஜித் பிரேமதாஸ பேசுவதாகவும் முஸம்மில் குறிப்பிட்டார்.

எனினும் இதனை மறுத்த சஜித் பிரேமதாஸ, முஸம்மிலின் குற்றச்சாட்டு பொய்யானது என்று குறிப்பிட்டார்.

அத்துடன் இந்த பொய்யான கருத்தை , பாராளுமன்ற பதிவுப் புத்தகத்தில் இருந்து நீக்கவேண்டும் என்றும் சஜித் பிரேமதாஸ சபாநாயகரை கேட்டுக்கொண்டார். (அ)

# முல்லைத்தீவில் தொல்பொருள் இடத்தை அகழ்ந்து சேதம் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் இருவர் கைது!

முல்லைத்தீவு, மே. 06

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட மன்னாகண்டல், வசந்தபுரம் கிராமத்தில் தொல்பொருள் இடத்தை அகழ்ந்து தொல்பொருட்களுக்கு சேதம் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

நெல்களஞ்சியசாலைக்கான அடித்தளத்துக்கான மண் நிரப்பும் நடவடிக்கைக்காக அருகில் உள்ள வழிபாட்டு இடம் ஒன்றின் பகுதிகளை கனரக இயந்திரம் கொண்டு தோண்டியபோது தொல்பொருள் சிதைவுகள் காணப்பட்டுள்ளன.

இவற்றுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் வசந்தபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் மற்றும் கனரக இயந்திரத்தின் சாரதி ஆகியோர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் குறித்த பகுதிக்கு பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட மன்னாகண்டல் கிராமத்தில் வசந்தபுரம் கமக்கார அமைப்புக்கான நெல் காயவிடும் தளம் பிரதேச செயலகத்துக்குச் சொந்தமான இடம் ஒன்றில் அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்தில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் மன்னாகண்டல் கிராம சேவையாளர், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக உத்தியோகத்தர் ஆகியோர் பிரசன்னமாகி சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டனர். (அ)

# சஜித்தின் செயலினால் கோபமுற்ற சபாநாயகர்

கொழும்பு, மே. 06

பிரதிச் சபாநாயகருக்கான இரகசிய வாக்கெடுப்பின் போது, தான் யாரை ஆதரித்து வாக்களித்தார் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபைக்கு, காட்சிப்படுத்தியதால் சர்ச்சை ஏற்பட்டது.

பிரதிச் சபாநாயகரை தெரிவு செய்வதற்கான இரகசிய வாக்கெடுப்பு சபையில் இடம்பெற்றது.11 கட்சிகளின் சார்பில் ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவும், எதிரணியின் சார்பில் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரும் போட்டியிட்டனர்.

இந்நிலையில் சபாபீடத்துக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள வாக்கு பெட்டிக்கு அருகில் வந்த சஜித் பிரேமதாஸ, தான் யாருக்கு சார்பாக வாக்களித்தார் என்பதை, வாக்குச் சீட்டை சபையில் காண்பித்து தெரியப்படுத்தினார். அவரின் இந்த செயலை சபாநாயகர் கண்டித்தார். (அ)

# வவுனியாவிலும் இன்று பூரண கடையடைப்பு

வவுனியா, மே. 06

இலங்கை பூராகவும் நடத்தப்படவுள்ள கடையடைப்பு போராட்டத்துக்கு ஆதரவாக வவுனியாவிலும் கடையடைப்பு நடத்தவுள்ளதாக ஆசிரியர் சேவா சங்கத்தின் தலைவர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியா ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடு பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டு மக்கள் தங்களது வாழ்வை கொண்டு நடத்த கஷ்டப்படும் நிலையில் அரசாங்கம் காத்திரமான நடவடிக்கை எடுத்து இந்த பிரச்னைக்கு தீர்வை காண்பதை விடுத்து பிரச்னையை மேலும் விரிவடையச் செய்து மக்களை துன்புறுத்தக்கூடிய நிலையை தோற்றுவித்துள்ளது. எனவே இதனை பொறுத்துக்கொள்ள முடியாது-என்றார். (அ)



# ஆனைக்கோட்டை, நவாலியில் கசிப்பு உற்பத்தி செய்த இரண்டு பேர் சிக்கினர்

யாழ்ப்பாணம், மே. 06

யாழ்.மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவின் கீழ் இயங்கும் மானிப்பாய் பொலிஸ் நிலையப் புலனாய்வு உத்தியோகத்தர்களுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல்களின் அடிப்படையில் ஆனைக்கோட்டை மற்றும் நவாலிப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபர்கள் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர்களின் உடைமையிலிருந்து 70 லீற்றர் கசிப்பு மற்றும் உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் 185000 மி.லீற்றர் கோடா மற்றும் உபகரணங்கள் என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன. (அ-03)

## பிரதிச்...

முன் வைப்பு, பொது மனுதாக்கல், 27/2 இன்கீழான எதிர்க்கட்சித் தலைவரின் விசேட அறிவிப்பு, அதற்கு நிதி அமைச்சரின் பதில் ஆகியன முடிவடைந்த பின்னர் முற்பகல் 10.45 மணியளவில் பிரதிச் சபாநாயகர் பதவிக்கான தேர்வு இடம்பெற வேண்டும் என்ற அறிவிப்பை சபாநாயகர் விடுத்தார்.

இதன்போது, பிரதிச் சபாநாயகர் பதவிக்காக - பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் 11 கட்சிகளின் சார்பில், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் எம்.பியும், முன்னாள் பிரதிச் சபாநாயகருமான ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவின் பெயர் முன்மொழியப்பட்டது.

சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உப தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் நிமல் சிறிபாலடி சில்வாவால், ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவின் பெயர் முன்மொழியப்பட்டது. அதனை சுசில் பிரேம ஜயந்த எம்.பி., வழிமொழிந்தார்.

ஆளுங்கட்சியான ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் சார்பில், பிரதிச் சபாநாயகர் பதவிக்கு எவரும் போட்டியிடவில்லை. ஆளுங்கட்சி ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவை ஆதரிக்கும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் சபையில் அறிவித்தார்.

இதனையடுத்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில், இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் பெயர், பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவால் முன்மொழியப்பட்டது. இதனை எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியல்ல வழிமொழிந்தார்.

பிரதிச் சபாநாயகர் பதவிக்கு இருவரின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளதால், வாக்கெடுப்பை நடத்துவதற்காக ஐந்து நிமிடங்களுக்கு, சபாநாயகரால் அழைப்பு மணி ஒலிக்கவிடப்பட்டது. அதன்பின்னர் இரகசிய வாக்கெடுப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

“பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாக்குச்சீட்டு வழங்கப்படும். அதில் தாம் விரும்பும் வேட்பாளரின் பெயரை சரியாக எழுத வேண்டும். தமது கையொப்பத்தையும் சரியாக இடவேண்டும். பெயர் சரியாக எழுதப்படா விட்டாலோ அல்லது கையொப்பம் இடப்படாவிட்டாலோ வாக்குச்சீட்டு நிராகரிக்கப்படும்.” என சபாநாயகர், அனைத்து எம்.பிக்களும் தெரியப்படுத்தினார்.

அவ்வேளையில் “எம்.பிக்கள் கையொப்பம் இடுவதாக இருந்தால், எப்படி இரகசியத்தன்மை பாதுகாக்கப்படும்.” என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள், சபாநாயகரிடம் கேள்வி எழுப்பினர்.

“பாராளுமன்ற நிலையியற் கட்டளையில் அப்படிதான் ஏற்பாடு உள்ளது, அதன் பிரகாரம்தான் தேர்வு நடத்தப்படும். எது எப்படி இருந்தாலும் இரகசியத்தன்மை பாதுகாக்கப்படும் .” என சபாநாயகர் திட்டவட்டமாக அறிவித்து, வாக்கெடுப்பை ஆரம்பிக்குமாறு ஆணையிட்டார். 2018 இலும் இப்படிதான் தேர்வு இடம்பெற்றது என ஆளுங்கட்சியினர், சபாநாயகரின் முடிவை ஆமோதித்தனர்.

இதனையடுத்து ஆளும் மற்றும் எதிரணியினருக்கு ‘வெற்று பெட்டி’ காண்பிக்கப்பட்டு , சபாபீடத்துக்கு முன்பாக வாக்குப் பெட்டி வைக்கப்பட்டது. ஒவ்வொரு எம்.பியின் பெயரும் , பாராளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகத்தால் அழைக்கப்பட, - சம்பந்தப்பட்டவர்கள் , வாக்களிப்புக்காக ஒதுக்கப்பட்ட இடத்துக்கு வந்து, வாக்குச்சீட்டில் தாம் ஆதரிக்கும் உறுப்பினரின் பெயரை எழுதி, கையொப்பம் இட்டு, வாக்குச்சீட்டை வாக்குப்பெட்டியில் இட்டனர்.

நண்பகல் 12. 28 மணியளவில் வாக்களிப்பு நிறைவுபெற்றது. சபாபீடத்தில் வைத்து , சபாநாயகர் முன்னிலையில், பாராளுமன்ற செயலாளர், பிரதிச் செயலாளர்களின் பங்களிப்புடன் வாக்குகள் எண்ணப்பட்டன. பின்னர் ஒரு மணியளவில் தேர்தல் முடிவை சபாநாயகர் அறிவித்தார்.

இதன்படி சுயாதீன அணிகளின் சார்பில் களமிறங்கிய ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய 148 வாக்குகளையும், எதிரணி சார்பில் களமிறங்கிய இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் 65 வாக்குகளையும் பெற்றனர். அந்தவகையில் பிரதி சபாநாயகராக ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவுசெய்யப்பட்டார். இதற்கு முன்னரும் அவரே அப்பதவியை வகித்தார்.

அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர், அஜித் ராஜபக்ஷவை, பிரதி சபாநாயகர் பதவிக்கு களமிறக்க ஆளுங்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முன்னதாக திட்டமிட்டிருந்தது. எனினும், நேற்றுக் காலை நடைபெற்ற பாராளுமன்றக்குழுக் கூட்டத்தில் அம்முடிவு திடீரென மாற்றப்பட்டது. பிரதிச் சபாநாயகருக்கான தேர்வில் தோல்வி ஏற்பட்டால், அது அரசுக்கு மேலும் பின்னடைவாக அமையும் என்பதாலும், சுயாதீன அணிகளுக்கு நேசக்கரம் நீட்டும் வகையிலும் மொட்டு கட்சி தந்திரோபாய பின்வாங்கலை மேற்கொண்டது. (அ)

## நாடு முழுவதும்...

இன்று முன்னெடுக்கப்படும் ஹர்த்தாலுக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட நாடு முழுவதுமுள்ள தொழில் சங்கங்கள் பலவும் கடமைகளில் இருந்து விலகியிருக்கத் தீர்மானித்துள்ளன. இதே போல, தனியார் போக்குவரத்து சங்கங்கள், பொது அமைப்புக்கள், வர்த்தகர் சங்கங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களும் ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

நாட்டின் தற்போதைய நெருக்கடிகளுக்கு பொறுப்பேற்று அரசாங்கமும் ஜனாதிபதியும் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாகவே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த ஹர்த்தாலை முன்னிட்டு நாடு முழுவதும் முப்படையினர், பொலிஸார் மற்றும் புலனாய்வு பிரிவினர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் அதிகளவில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அத்துடன், கொழும்பில் பாராளுமன்றம் உள்ளிட்ட முக்கிய இடங்கள் அமைந்துள்ள வீதிகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன.

எது எப்படி இருப்பினும், இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகள் அனைத்தும் சேவையில் ஈடுபடும் என்று அதன் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார். அத்துடன், அத்தியாவசிய சேவைகளும் இயங்கும் என்று ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அரசாங்கம் பதவி விலகாவிடின் எதிர்வரும் 11ஆம் திகதி முதல் தொடர்ச்சியான ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்படும் என்று தொழில்சங்க ஒருங்கிணைப்பு மையம் அறிவித்துள்ளது.

இந்த அமைப்பின் அழைப்பின்பேரில், கடந்த மாதம் 28ஆம் திகதியும் அரசாங்கத்தை பதவி விலக வலியுறுத்தியும் பணிப் புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நல்லூர்...

கோவில். அந்த கோவிலை நடத்துபவர் ஓர் அறங்காவலர்.

அங்கு அர்ச்சகர்களுக்கு தட்டில் காசு போட்டால் வாங்கமட்டார்கள். அர்ச்சனைக்கு ஒரு ரூபாய் மட்டுமே. பணத்தை உண்டியலில் மாத்திரமே இடமுடியும். சிறப்பு பிரமுகர், சாதாரண மக்கள் என்றெல்லாம் கிடையாது. அனைவருமே வரிசையில்தான் செல்ல முடியும். தமிழ் நாட்டிலும் இவ்வாறான சட்டத்தை கொண்டு வர முடியாதா - என்று கேள்வி எழுப்பினார். (ஐ)

# பஸில் ராஜபக்ஷவுக்கு பின்வரிசையில் இடம்!

கொழும்பு, மே 06

முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு பாராளுமன்றத்தில், ஆளும் கட்சியின் பின் வரிசையில் 33ஆவது ஆசனம் ஒதுக்கப்பட்டது.

நேற்று அவர் அந்த இருக்கையில் அமர்ந்திருந்திருந்தமையை அவதானிக்க முடிந்தது.

பஸில் ராஜபக்ஷ நிதியமைச்சர் பதவியை இராஜிநாமா செய்த பின்னரும், புதிய அமைச்சரவை நியமிக்கப்படுவதற்கு முன்னரும் சபையில் ஆளும் கட்சியின் முன்வரிசை ஆசனத்தில் அமர்ந்திருந்தார்.

எனினும் தற்போது அவருக்கு, ஆளும் கட்சியின் பின் வரிசையில் 33ஆவது ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# முடங்கும் நிலையில் அம்புலன்ஸ் சேவை!

கொழும்பு, மே 06

‘சுவசரிய’ நோயாளர் அம்புலன்ஸ் சேவை எந்த நேரத்திலும் முடக்கப்படும் நிலை எழுந்துள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

நிதிப்பற்றாக்குறை காரணமாகவே இந்த சேவை நிறுத்தப்படும் நிலை எழுந்துள்ளது. இந்த சேவை நாளொன்றுக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட நோயாளிகளை வைத்தியசாலையில் சேர்க்கின்றது. இதனை சமூக பாதுகாப்பு நடவடிக்கையாகப் பேண வேண்டும். இதனைத் தொடர்ந்தும் முன்னெடுக்கத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்யுமாறு நிதியமைச்சரை கேட்டுக்கொள்கிறோம் - என்றார். (ஐ)

# ஒரு சில மாற்றங்களுடன் முன்னோக்கி செல்வோம்!

## சபை முதல்வர் தினேஷ் குணவர்த்தன

கொழும்பு, மே 06

பாராளுமன்ற ஜனநாயகத்தை பாதுகாத்து மக்கள் கோரும் ஒருசில மாற்றங்களுடன் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் தீர்மானங்களுக்கு அமைய முன்னோக்கி செல்ல எதிர்பார்த்துள்ளோம் என சபை முதல்வர் தினேஷ் குணவர்தன சபையில் வலியுறுத்தினார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தொடரின் போது புதிய பிரதி சபாநாயகராக ரஞ்சித் சியாம்பலபிட்டிய தெரிவு செய்யப்பட்டமையைத் தொடர்ந்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஆளும் தரப்பினர் என்ற அடிப்படையில் அதிகூடிய வாக்கு வித்தியாசத்தில் புதிய பிரதி சபாநாயகரை தெரிவு செய்துள்ளோம். புதிய பிரதி சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ரஞ்சித் சியாம்பலபிடியவுக்கு ஜனாதிபதி, பிரதமர் உட்பட அரசாங்கத்தின் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேன்மைபொருந்திய பிரதி சபாநாயகர் பதவிக்கு கட்சி மட்டத்தில் எவரும் தெரிவு செய்யப்படுவதில்லை. பாராளுமன்ற ஜனநாயகத்துக்கு அமையவே பிரதி சபாநாயகர் தெரிவு இடம்பெறுகிறது. கடந்த காலங்களில் ஆளும் மற்றும் எதிர்ககட்சியின் உறுப்பினர்கள் இந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

ஜனநாயக முறைமையிலான வாக்கு முறைமையில் வெற்றி,தோல்வி ஆகியவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதிக தரப்பினரால் விரும்பப்படுவர் வெற்றிப் பெறுவர், விரும்பியோ, விருப்பமில்லாமலோ, குறைந்த வாக்குகளை பெறுபவர் தோல்வியடைவார்.

பாராளுமன்ற ஜனநாயகத்தை பாதுகாத்து நாட்டு மக்கள் கோரும் ஒரு சில மாற்றங்களுக்காக ஜனாதிபதி மற்றும் பிரதமர் முன்னெடுத்துள்ள தீர்மானங்களுக்கமைய முன்னோக்கி செல்ல எதிர்பார்த்துள்ளோம் - என்றார். (ஐ)

## பல்கலை...

முறைமையை மாற்றுவோம்” எனும் தொனிப்பொருளில் நேற்று வியாழக்கிழமை மாலை சிறீ ஜெய வர்த்தனபுர பல்கலைக்கழகத்துக்கு அருகில் இருந்து பல்கலைக்கழக மாணவர்கள் பேரணியை ஆரம்பித்தனர்.

இந்தப் பேரணி பாராளுமன்றுக்கு சென்றபோது, பாராளுமன்றுக்கு அருகிலுள்ள வீதித் தடையில் அவர்கள் மறிக்கப்பட்டனர். இந்த வீதித் தடையை மாணவர்கள் தகர்க்க முற்பட்டபோது பொலிஸார் கண்ணீர்ப் புகை பிரயோகம் மேற்கொண்டனர்.

இதையடுத்து அந்தப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது. (ஐ)

## எரிபொருள்...

டுப்பாடுகள் செல்லுபடியாகாது என்றும் எரிபொருளுக்கு தட்டுப்பாடு நிலவி வருகின்ற நிலையிலேயே இந்தக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சம்பந்தன்,...

பினர் வினோநோகராதலிங்கம் ஆகியோர் பங்கேற்கவில்லை.

இதேசமயம், அரசாங்கத்திலிருந்து விலகி தனித்து இயங்கும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸவும் நேற்றைய பாராளுமன்ற அமர்வில் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்றைய தினம் ஆளும் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவும் சிறீ லங்கா சுதந்திரக் கட்சி மற்றும் தனித்து இயங்கும் 11 கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து பிரதி சபாநாயகராக ரஞ்சித் சியாம்பலபிட்டியவை மீண்டும் தெரிவு செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பாராளுமன்றை...

பெரமுன கட்சியின் ரோஹித அபேகுணவர்த்தன எம். பி தெரிவித்துள்ளார்.

இந்தக் கருத்தை அவர் பாராளுமன்றத்தில் நேற்று முன்வைத்தபோது, ஐக்கிய மக்கள் சக்தியின் ஹர்ஷ டீ சில்வா, எரான் விக்ரமரத்ன ஆகியோர் பாராளுமன்றம் கலைக்கப்படும் பட்சத்தில் எதிர்க்கட்சிகள் ஆதரவளிக்கத் தயாராக இருக்கின்றன என்று தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள பொதுமக்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் பாராளுமனற் உறுப்பினர்கள் தவிக்கிறார்கள். அத்துடன், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டும் -என்றும் ரோஹித கூறினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இந்தியா வழங்கிய கடனில் இரும்பு வாங்கவேயில்லை!

## சபையில் கூறினார் நிதி அமைச்சர்

கொழும்பு, மே 06

**அத்தியவசிய உணவு பொருட்களை இறக்குமதி செய்ய இந்தியா வழங்கிய கடன் நிதியில் இருந்து 750 மில்லியன் டொலர் நிதியை இரும்பை இறக்குமதி செய்ய செலவிட்டுள்ளதாக முன்னெடுக்கப்படும் பிரசாரம் உருவாக்கப்பட்ட புனைக்கதை என நிதியமைச்சர் அலி சப்றி நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

இது சம்பந்தமாக நிதியமைச்சு ஏற்கனவே விளக்கமளித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நிலையியல் கட்டளைச் சட்டத்தின் 27(2) இன் கீழ் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே நிதியமைச்சர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் நெருக்கடியான நிலைமை உருவாகியுள்ள சந்தர்ப்பத்தில் ஒருவர் மீது, ஒருவர் குற்றங்களைச் சுமத்தாது கொள்கை ஒன்றுக்கு அமைய செயற்படவேண்டும். உலகில் எரிபொருளின் விலை 138 வீதமாக அதிகரித்துள்ளது.



நாட்டில் வரி செலுத்துவோர் பதிவு செய்யப்படுவது 10 லட்சத்திலும் பெறுமதி சேர் வரி செலுத்துவோர் 20 ஆயிரமாகவும் குறைந்துள்ளனர். வரி செலுத்துவோரின் எண்ணிக்கை குறைந்துள்ளமை மிகப் பெரிய பிரச்னை.

கடனுக்காக அதிகமான வட்டியை செலுத்தும் நாடு இலங்கை. கடன்களுக்கான வட்டி 50 வீதம். அரசாங்கம் வரி மறுசீரமைப்பு பொதி ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன் போது அனைத்து மட்டங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன. பொருளாதார நெருக்கடி என்பது இலங்கையில் மாத்திரம் காணப்படவில்லை. பல நாடுகளில் பொருளாதார நெருக்கடி காணப்படுகிறது.

இது கோவிட் தொற்றுடன் அதிகரித்த நிலைமை. அதேவேளை 65 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியாவை இறக்குமதி செய்வது தொடர்பாக இந்திய அரசுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளோம்-என்றார். (அ)

# இ.போ.சவும் பகிஷ்கரிப்பு

கொழும்பு, மே 06

இன்று நடைபெறவுள்ள நாடு தழுவிய ஹர்த்தாலில் இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுள்ளதாக அகில இலங்கை போக்குவரத்து ஊழியர் சங்கம் கூறியுள்ளது.

மக்கள் அரசாங்கத்தை ஸ்தாபிக்கும் வகையில் நடத்தப்படும் ஹர்த்தாலில் அனைத்து ஊழியர்களும் பங்கேற்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர் சங்கப் பொதுச் செயலாளர் சேபால லியனகே தெரிவித்தார்.

இது தொடர்பில் இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் மற்றும் தொழிலாளர் திணைக்கள ஆணையாளர் நாயகம் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 05 - 01 - 1935 |  | 03 - 05 - 2022 |

### குமரையா நாகநாதி

(பொன்னம்பலம்)

யாழ். சரவணை கிழக்கு வேலணையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும், கனடா Markham ஐ வசிப்பிடமாகவும் கொண்ட குமரையா நாகநாதி அவர்கள் 03.05.2022 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகநாதி - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும், சுருவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற கார்த்திகேசு - செல்லாச்சி தம்பதிகளின் மருமகனும், மகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், வள்ளியம்மை, செல்லப்பா, தம்பிராசா, சோமசுந்தரம், கணபதிப்பிள்ளை (பரராஜசிங்கம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான, கயிலாயபிள்ளை, சோமசுந்தரம் மற்றும் பரமேஸ்வரி, ராஜேஸ்வரி, சிவபாலன் (இலங்கை), தங்கலெட்சுமி, பூமணி, தங்கம்மா, பூங்காவனம், சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், மீரா, இராகுலன்(கண்ணன்), பிரதீபன் (சுமணன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,பாலகுமார் (பாபு), ராதிகா, ஜனனி ஆகியோரின் அன்பு மாமனாரும், ராகவி, பவித்திரன், பிரணவி ஆகியோரின் அன்புத் தாத்தாவும்,சாயகி, பிரதுசன், அக்ஷ்யன், அகரன் ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும் ஆவார்.

**பார்வைக்கு**
Sunday, 08 May 2022 1:30 PM - 5:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

**கிரியை**
Monday, 09 May 2022 6:00 AM - 6:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

**தகனம்**
Monday, 09 May 2022 8:30 AM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**பிரதீபன்(சுமணன்) - மகன்**
Mobile : +14167799976

தகவல்:
**குடும்பத்தினர்**

# அனைத்துப் பல்கலை ஊழியர்களும் இன்றைய போராட்டத்துக்கு ஆதரவு

கொழும்பு, மே 06

அரசாங்கத்தை பதவி விலகுமாறு வலியுறுத்தி இன்று வெள்ளிக்கிழமை நாடளாவிய ரீதியில் ஹர்த்தால் முன்னெடுக்கப்படுகிறது.

இப் போராட்டத்துக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊழியர் சங்கமும் ஆதரவு வழங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்-

இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ள வேலைநிறுத்தத்துக்கு அனைத்துப் பல்கலைக்கழகங்களின் தொழிற்சங்க கூட்டுக்குழுவானது, பல்கலைக் கழகங்களின் தொழிற்சங்கங்களும் இணைந்து கொள்வதென்று தீர்மானத்தை வெளியிட்டுள்ளது.

நாட்டின் கடுமையான பொருளாதார நெருக்கடியால் சடுதியாக அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவை ஈடுசெய்ய முடியாத நிலையில் எமது நீண்டகாலச் சம்பள முரண்பாடுகளைச் சீர்செய்ய விடுக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்ந்தும் உதாசீனம் செய்யப்படுவதை வெளிக்கொணரும் முகமாகவும் பல்கலைக்கழகங்களில் அரசியல்வாதிகளின் தலையீடுகளைக் கண்டித்தும் அனைத்துப் பல்கலைக்கழங்களிலுள்ள கல்விசாரா ஊழியர்கள் இன்று ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)







# மக்களுக்காக 65 பேர் மட்டுமே பாராளுமன்றத்தில் உள்ளனர்

## சாணக்கியன் எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, மே. 06

பாராளுமன்றில் 65 பேர் மட்டுமே மக்களுக்காக உள்ளதாகவும், 148 பேர் ராஜபக்ஷக்களுடனேயே தற்போதும் உள்ளனர் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர், பாராளுமன்றில் நடத்தப்பட்ட, நடத்தப்படும் நாடகங்கள் இன்று வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

ஏனென்றால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவை தெரிவு செய்வார்க ளென நான் நினைக்கவில்லை.

ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவுக்கு வாக்களித்து, அவரை பிரதிச் சபாநாயகராக தெரிவு செய்த 148 பேரும் தற்போதும் ராஜபக்ஷக்களுடனேயே உள்ளனர்-என்றார். (அ)

# மின்சார உற்பத்திக்கு டீசல் வழங்குவதற்கு முன்னுரிமை

கொழும்பு, மே. 06

நுரைச்சோலையில் ஏற்பட்டுள்ள மின் தடை காரணமாக மின் உற்பத்திக்கு டீசல் வழங்குவதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாக மின் சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

போதுமான பெற்றோல் 92 ஒக்ரேன் மற்றும் சுப்பர் டீசல் பங்குகள் சந்தைக்கு வெளியிடப்பட்டுள்ளதாகவும் 95 ஒக்ரோன் பெற்றோல் மற்றும் ஒட்டோ டீசல் என்பவற்றின் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.05.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கச்சேரி ஆரம்பம்-மறுஒளிபரப்பு

**பகல்**

12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
01.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-தீராத விளையாட்டுப்பிள்ளை,சிறுத்தை திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10




**இரவு**

7.00 மணி : ரசிகன் எனகின்ற தலைவன்-நகைச்சுவை நிகழ்ச்சி



08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -செயற்கை உரம்



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டை டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஐ ரிவி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு